பிறுவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 33

## ஜாதி ஏன்?

★

கே. எஸ். துரைராஜ், பெரியகுளம்.

''கண்டதுண்டோ கண்ணன்போல்'' என்ற மெட்டு.

★

ஜாதி என்பது உனக்கேன்—தமிழா
ஜாதி என்பது உனக்கேனே ஏனே ஏனே (ஜா

பாதியில்வந்த பழக்கமதாமே
ஆதியில் நம்முடைய மரபல்லவே (ஜா

ஓதி உணர்ந்தவர் உன்மொழிச்சொல்லல்ல
ஆதலினலது அன்னியர்க்கே என்பார் (ஜா

எல்லா உயிர்க்கும் பிறப்பொக்கும் என்ற நம்
இடிலா வள்ளுவன் உரையை மறந்தோம்
பொல்லாத ஆரியர் புகுந்ததினலே
பொன்றும் இடர் இனிப்போதும்போதும் (ஜா

# கடவுள் விளக்கம்.

நக்கீரன்.

இஞ்ஞான்றைப் பெரும்பான்மை மக்களிடையே மூடநம்பிக்கைகள் ஒழிந்து பகுத்தறிவு வளர்ச்சியடைந்துவருவதைக் காண்கின்றோம். இதன் காரணமாகப் பகுத்தறிவு வளர்ச்சிக்குத் துணையாக வேண்டப்படும் பற்பல ஐயங்களும் அவற்றிற்குத் தெளிவுரைகளும் விரும்பி நிற்கும் நிலையையே மக்களிடை காண்கின்றோம். அவர்கள்பால் எழும் ஐயப்பாடுகள் சிலவற்றுள், 'கடவுள்' என்பதற்குத் தெளிவான விளக்கம் வேண்டுமென்பது, அவர்களின் ஐயப்பாடுகளுள் முதலிடம் பெற்று நிற்பதையும் காண்கின்றோம்.

ஆகையால், இது குறித்து எழுதப்படும் விளக்கம் சிறிது விரிவாக இருத்தல் வேண்டுமென்பது பலரின் விருப்பமாயினும், இதுபோன்ற ஐயப்பாடுகளுக்கு, வளர்ச்சியடைந்துவரும் பகுத்தறிவுலகம் விரிவான விளக்கத்தை அவ்வளவாக விரும்பாது என்ற துணிபாலும், காலநிலையும்—காகிதப் பஞ்சத்தையும் ஒட்டி, இதற்கு, நமது 'திராவிடநாடு' இதழின் வாயிலாக ஒரு சுருக்க விளக்கம் எழுதலாமா என்ற எமது எண்ணம் நிறைவேறியதன் காரணமாகக், 'கடவுள்' என்ற சொல்லைப்பற்றிய விளக்கம்சுருக்கமாக இங்குதரப்படுகிறது.

எனவே, கடாவிடைகளால் மறுப்பதும் ஏற்றுக்கொள்வதுமான மதநூற்சான்றுகளை இதன் கண்புகுத்தி, ஒன்றுக் கொன்று மாறுபடும் கருத்துக்களையும், முன்னுக்குப்பின் முரண்படும் கொள்கைகளையும், கற்பார் கேட்பார் ஆகிய இருசாராருக்கும், "அதுவோ" "இதுவோ" என்ற மயக்க உணர்வையும் கொடுக்க நாம் விரும்பவில்லை. ஆகையால், நூலாதாரம் காட்டிஐயப்பாடுகளை நீக்கிக்கொள்வதென்பது, மீண்டும் மீண்டும் ஐயப்பாட்டினையே தருவதாகும். அன்றியும், காலநிலைக்கும், மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், இயற்கைப் பண்புக்கும் ஏற்ப ஒன்றை எடுத்துக் கூறுமிடத்து, அதன் கண், ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்கும் நூல்களை ஆதாரம் காட்ட முயல்வது, பின்னும் அறியாமையின் வளர்ச்சிக்கே ஆதரவு தருவதாக முடியும். எனவே, இக்கட்டுரை அறிவுக்குப் பொருந்தகூடிய ஆராய்ச்சி யுணர்வோடு எழுதப்படுவதாகையால், இதனைப்படிப்பவர் காலற்ற கருத்துடையராய்க்—காய்தல் உவத்தில் இல்லாராய்க்—கண்டொன்று சொல்லாராய்க்—கடு கடுப்பில்லாராய்க் இருக்கும் இயல்பினராவது மிகவும் இன்றியமையாததாகும்.

நமது அருமைத் தமிழ் மொழியின் கண் அமைந்துள்ள ஒவ்வொரு சொல்லும் சிறந்த மாதுளங்கனிபோல் திகழ்கின்றது. மாதுளங்கனியை உடைத்துப் பார்த்தால், அதனுள்ளே மாணிக்கமனைய ஒளிமணிகள் சுவைமிக்க சாறு கனிந்து மின்னுகின்றன. அவ்வாறே நமது தமிழ்க் களஞ்சியத்துள் நுழைந்து ஒரு பைந்தமிழ்ச் சொல்லைப்பற்றி எடுத்து அதனை அமைதியாய் உடைத்துப் பார்த்தால், அதன் கண் புதைபட்டுக் கிடக்கும் எத்தனையோ அறிவு மணிகள்மின்னல்போல் பளீர் பளீர் என்று ஒன்றன்பின் ஒன்றாய் மின்னலிட்டுத் திகழ்வதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, 'வேலை' என்றதமிழ்ச் சொல், தொழிலைக் குறித்து நிற்பதென்பதனை எவரும் அறிவர். ஆனால், அவ் "வேலை" என்ற சொல்லே 'கடல்' என்பதையும் குறிப்பதாகும். 'வேலை' என்ற சொல் கடலுக்கு எவ்வாறு பொருந்துமெனின், கடலானது அலை அடித்தலாகிய வேலையை ஓயாது செய்து கொண்டிருப்பதால், அதற்கும் 'வேலை' என்றசொல் ஏற்படுவதாயிற்று. இங்ஙனமே பல்லாயிரக்கணக்கான சொற்கள் நிரம்பியுள்ள நமது செந்தமிழ்க்களஞ்சியத்தின் சிதைவற்ற சிறப்பு உணர்ந்துகொள்ளப்படும்.

இவ்வாறு பல பொருள்களை விளக்கும் ஒரு சொல் தமிழ் மொழியில் பல்லாயிரக் கணக்கில் உள்ளனவென்பதை மட்டும் தம் வெள்ளறிவால் அறிந்தவுடனே, சிலர் அவற்றிற்குப் பொருந்தாப்பொருள் கொடுத்துத் தமிழ்க்கொலை செய்ய முற்பட்டு விடுகின்றனர். ஐயகோ! இவர்களின் அறிவு இருந்தவாறு மிகநன்று! நன்று!! தமிழ்க் கொலை செய்பவர்களுள் தலைசிறந்து நிற்பவர்கள் மதத் தலைவர்களே. இவர்கள் செய்யுந் தமிழ்க் கொலைக்கு அளவே கிடையாது.

இஞ்ஞான்றை மத நூலாரால் கையாளப்பட்டு வரும், 'கடவுள்' என்ற தனித் தமிழ்ச் சொல், அவர்கள் கூறும் பொருளுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாததாகும். இவ்வுண்மை, கடவுள் என்ற சொல்லின் உண்மைப் பொருளை விளக்கும் விழுமிய கருத்துக்களால் நன்கு தெளியப்படும். அதாவது, 'கடவுள்' என்பது ஒரு தனித் தமிழ்ச் சொல்லாகும். இச்செழுமிய சொல் மக்களிடம் காணப்பெறும் மெய்யுணர்வு ஒன்றினை மட்டுமே குறித்து நிற்பதாகும். மெய்யுணர்வு என்பது, மெய்யில், அதாவது, குருதி—எலும்பு—நரம்பு தசை— தோல் ஆகியவற்றைக்கருவிகளாகக்கொண்டு இயக்கந்தன்மை பெற்றுள்ள உடம்பில் காணப்பெறும் உணர்வைக் குறிப்பதாகும். இவ்வுணர்வு மக்களுக்கும் மாக்களுக்கும் சிறிது மாறுபட்டும் பெரிது வேறுபட்டும் உளது. காரணம்; உடற்கூற்றின் அமைப்பே. உணர்வு உண்டாவதற்கு உடம்பிலுள்ளகருவிகளே காரணமாய் நிற்பதால், அவை தம்மின் அமைப்பிற்கேற்ப, அந்தந்த உடம்புகள் உணர்வைப் பெறுகின்றன. பெற்றஉணர்வை அதற்குத் தக்க முறையில் பயன்படுத்தும் தன்மை மக்கள் உடம்பில் அமையப் பெற்றிருப்பதால், மக்களே மெய்யுணர்வுடையவர்கள் என்பது விளங்கும்.

இனி, மக்களிடம் காணப்பெறும் இம்மெய்யுணர்வை அப்பெயர் கொண்டே அழைக்காமல், 'கடவுள்' என்று அழைப்பானேன் என்பதாகக் கேட்கலாம். 'கடவுள்' என்ற சொல், இருபொருள்களை ஒன்று சேர்த்து, ஒரு பொருளை விளக்கும் ஒரு கூட்டுச் சொல்லாகும். அதாவது, 'கட'—'உள்,' உள்ளத்தைக்கடந்து நிற்கும் ஒரு பொருள் என்பது கருத்து. உள்ளத்தைக் கடந்து நிற்பது உணர்வு ஒன்றேயாதலால், அதற்குக் கடவுள் என்பது பெயராயிற்று. ஒருவனுக்கு ஒரு காலத்தில் இல்லாத உணர்வு, இன்னொரு காலத்தில் உண்டாவதால், உள்ளத்தைக் கடந்து நிற்பது உணர்வு ஒன்றேஎன்பது பெறப்படும். படவே, உள்ளத்தைக்கடந்து நிற்கும் ஒரு உண்மைப் பொருளாக, அப்பொருளை எவ்வகையினும் சிதைவுறாது விளக்குவது, 'கடவுள்' என்றகவின் தரு சொல்லேயாகும்.

ஒருவனுக்கு இருக்கக்கூடிய உணர்வானது, அவன் உள்ளத்தைக்கடந்து நின்று, அவன் உள்ளத்தினுள்ளே காணப்படுகின்றது என்பதை ஒரு சிறிது விளக்குவதும் ஈண்டைக்கு வேண்டற்பாலதாகின்றது.

எப்படியெனின், ஒருவனிடம் ஒரு காலத்தில் காணப்பெறாத உணர்வு இன்னொருகாலத்தில் அவனிடம் இருக்கக் காண்கின்றோம். ஈண்டு உணர்வென்பது அறிவைக்குறிப்பதாகும். எனவே, ஒரு காலத்தில் ஒருவனிடம் காணப்பெறாத அறிவை இன்னொருகாலத்தில் அவனிடம் காண்பதற்குக்காரணம், காண்பவனுடையவும் காணப்படுபவனுடையவும் அறிவு நிலையைப்பொறுத்ததென்பது ஒரு புடை எழும்விளக்கமாயினும், அதுவே முற்று முடிந்த காரணமாகக்கொண்டுவிடமுடியாது. ஏனென்றால், ஒருவன் பிறக்கும் போது அறியாமையோடு பிறக்கின்றான்; பின்னர் அவனுக்குப்படிப்படியாகஅறிவு உண்டாகிறது; அல்லது அறிவை உண்டாக்குந்துறைகளை அடையுமாறு தூண்டப்படுகிறான். அதன்பிறகு தான் அறிந்தவற்றைஉணரும் பகுத்தறிவு உண்டாகி

(11-ம்பக்கம் பார்க்க)

# பொன்மலைத் திராவிட மாணவர் கழகத் திறப்புவிழாவுரை.

(கோ, சி. பெரியசாமிப் புலவர்.)

திராவிட மாணவர்கள் இப்பொழுது எழுச்சியுற்று ஆங்காங்கு கழகங்கள் திறந்துவைத்துச் செயலாற்ற முனைவதைக்கண்டு யான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வுணர்ச்சியும் ஊக்கமும் திராவிடமாணவர்கட்குக் கடைசிவரையில் நிலைபெறவேண்டுமென வேண்டுகின்றேன். யாம் இத்தகு கழகங்களைத்திறந்து வைப்பதன்மூலம் நம் பணியை நிறைவேற்றிவிட்டதாக எண்ணி மகிழ்ந்து உறங்கிவிடக்கூடாது. உறங்காது இரவும் பகலும் செயலாற்றவேண்டும். திராவிட நாட்டைப்பெற மட்டும் திராவிடமாணவர்கள் துணிந்துநின்று, எத்தகையஇடையூறுகட்கும் அஞ்சாது நின்று பணியாற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டு மேற் செல்லுகிறேன். சில நாட்களாய்த் திவான் பார்ப்பனர் முதல், புரோகிதப் பார்ப்பனர்வரை எல்லாப் பார்ப்பனரும் டாக்டர் அம்பேத்கார் இந்துமதத்தைத் தாக்கிவிட்டார், இந்துமதத்தைத்தாக்கி விட்டார் எனப் புலம்புகின்றனர். டாக்டர் இந்துமதத்தைத் தாக்கினாரா? பிராமணியத்தைத் தாக்கினாரா? என்பதை ஆராய்ந்து பாருங்கள்!

சென்னையில்பேசிய டாக்டர் அம்பேத்கார்:—"ஒரு வகுப்பினர் மற்றவர்களை நசுக்கலாம் என்றும், ஒருவகுப்பினருக்கு மட்டுமே கல்வி, சொத்து முதலிய உரிமைகள் உளவென்றும், மற்ற வகுப்பினர்கள் அடிமைகளாகப்பிறந்து, அடிமைகளாக வாழ்ந்து, அடிமைகளாக இறக்க வேண்டுமென்றும், சமஅந்தஸ்து கிடையாதென்றும், நம்மை ஆளும்வகுப்பினர் (பிராமணர்) நினைத்துக்கொண்டிருக்கும் வரையில் அவர்கள் வசம் சர்க்காரைவிடலாமா?" எனக்கேட்டார். இவ்வினாவில் டாக்டர் எங்கே இந்துமதத்தைத் தாக்கினார்? இவ்வினா பார்ப்பனியத்தைத் தாக்கியதா? இந்துமதத்தைத் தாக்கியதா? இவ்வினா எவ்வளவு ஆழமும் நுட்பமும் அமைந்த வினாவென்பதை நம்மவர்கள் ஆராய்ந்துபார்த்து விழிப்புற்றுச் செயலாற்றுவார்களாக!

"ஆளும் வகுப்பினரைப் பலப்படுத்தவே நாட்டுச் சுதந்தரம் உபயோகப் படப்போகிறதென்றால், அச்சுதந்தரத்தை யாம் போராடித் தடைசெய்ய வேண்டாமா?" என டாக்டர் அம்பேத்கார் மேலும் வினாவெழுப்பி நம்மைப் போராடும்படியும், போராடிப் பார்ப்பனியத்தின் கையில் ஆட்சியைவிடாமல், கைப்பற்றும்படியும் தூண்டியுள்ளார். இந் நல்லுரைகளை நம்மவர்கள் உணரப்போகிறார்களா? உணர்ந்து போராடப் போகின்றார்களா? அன்றி உறங்கிக் கிடந்து ஆரியத்திற்கு அடிமைப்பட்டுஉழலப்போகிறார்களா?

இங்ஙனம் உறங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்பும் டாக்டர் அம்பேத்கார் உரை பார்ப்பனச் சேரிகளில் கலக்கத்தையுண்டாக்காதொழியுமா? மேலுங் கேளுங்கள்.

"1937-ம் வருடத்தில் ஏறக்குறைய எல்லாமக்கட்கும் வாக்குரிமை என்ற அடிப்படையின்மீது தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஏழு (7) காங்கிரஸ் மாகாணங்களில் பிராமணப் பிரதம மந்திரிகள் ஏற்பட்டனர். மந்திரிகளில் பாதிப்பேர் பிராமணர்களாக இருந்தனர். இவ்விதமாகக் காங்கிரசின் பேரால் பிராமண வகுப்புஆட்சிபுரியும் வகுப்பாக மாறியது. மற்றவர்கள் ஆளப்படுவோராயினர். ஆட்சி செய்யும் வகுப்பினர் பொறுப்புள்ளவர்களாக இருந்தால் பாதகம் ஒன்றும் ஏற்படமாட்டாது. ஆனால் வகுப்புச்சமத்துவத்தில் நம்பிக்கை இல்லாத சமூகம் எவ்வாறு பொறுப்புணர்ச்சியுடன்நடந்து கொள்ளமுடியும்? இத்தகைய வகுப்பு ஆட்சிப் பொறுப்பேற்படுவதன் மூலம் தேசிய சர்க்கார் ஏற்பட்டுவிட்டதாகநாம் சொல்லமுடியுமா?" என டாக்டர் அம்பேத்கார் வினவுகின்றார். இவ்வினாவுரைகள், சர். சி. பிக்குக்குடைச்சலை உண்டாக்காமலிருக்குமா? இவ்வுரைகள்இந்து மதத்தைத் தாக்கியதாகச் சர். சி. பி. எண்ணுகின்றாரா? இவ்வுரைகள் பிராமணர்களின் சூழ்ச்சிகளை விளக்கும் கண்ணாடிகளாக உலகங்கூறுகின்றது.

சர். சி. பி. இந்து மதத்தைத் தாக்கிய உரைகள் எனக் கூறுகின்றார். இதனைச் சான்று டாக்டர் அம்பேத்கார் "இந்து மதம் பிராமணமதம்" என்றுகூறினார். பிராமணியத்தைத் தாக்கினால் இந்து மதத்தைத் தாக்குதலாகுமானால் அம் மதத்தைப் பிராமணமதம் என்று கூறுதலில் என்ன தவறுளதென்று சர். சி. பியை யாம் வினவுகின்றோம்.

## ஏனைய நாட்டுச் சமுதாய அமைப்பு.

இளமையில் செர்மனியில் கொற்றுவேலை செய்துவருபவர்கட்குச் சிற்றாளாயக் கல் தூக்கிக்கொடுத்துக்கொண்டிருந்த ஹிட்லர் அந்நாட்டின் தலைவராக வரமுடிந்தது. கொற்றன் மகன்என்பதற்காக அவரைச் சமுதாய வாழ்க்கையினின்றும் செர்மானியர் விலக்கிவிடவில்லை. இதேபோல இளமையில் கொல்லன் உலைக்களத்தில் சம்மட்டிபிடித்து அடித்துக்கொண்டிருந்த முசோலினி தன்சொந்தஅறிவாற்றலால் இத்தாலியின் சர்வாதிகாரியாத வரவியன்றது இத்தாலியில். சமுதாய வாழ்வு அவர் உயர்வினைத் தடைசெய்யவில்லை. இதேபோன்று உருசியாவில் (ரஷ்யர்) செருப்புத் தைக்கும் வேலையை மேற்கொண்டிருந்த விசேரியன் மகனாராய 'ஜோசப் ஸ்டாலின்' ரஷ்யாவின் தலைவராவதற்கு அந்நாட்டுச் சமுதாய அமைப்பு இடங்கொடுத்தது. இந்நாட்டில் ராவ்பகதூர் N. சிவராஜ், சட்ட கல்லூரிப் பேராசிரியராயிருந்தாராயினும் அறிவாற்றல் மிகுதியும் படைத்தவராயினும் இவர் இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத் (Endonment Board president.) தலைவராக வந்து எல்லாக்கோவில்களிலும் புகுந்துபார்த்து ஆட்சிபுரிய இந்நாட்டுப் பார்ப்பனியம் இடந்தருமா? அரசாங்கந்தான் பார்ப்பனியத்திற்குப் பயப்படாமல் சிவராஜை அவர்களை நியமிக்குமா? குறுகிய நோக்கமுடைய பார்ப்பனர்கள் "யாம் யாவரும் சகோதரர்கள்" என்று மேடையிற் பேசினால் காரியம் சாயுமா? செயலிலன்றோ சகோதர ஒற்றுமையைக் காட்டவேண்டும்.

## தியாகமின்றித் திராவிடநாடா?

யாம், திராவிட நாடு! திராவிடநாடு! என்று வாயால் பேசினால் திராவிடநாட்டாட்சியுரிமை நமக்கு உயர இருந்தகீழே விழுந்துவிடாது. தியாகங்கள் பல புரிய வேண்டும். யாம் அருமையெனப் போற்றிய பொருள்களையும் இழக்க நேரிடின் மனந்துணிந்து இழக்கவேண்டும். அவ்வாறெல்லாம் செய்யாமல் வறிதே திராவிட நாட்டைப் பெற்றுவிடுவோமென்றெண்ணுதல் பகற்கனவாக முடியும் என்பதை யாம் நன்குணரவேண்டும். பிறநாட்டுச் செயல்களைப்போற்றி யுணர்ச்சிபெற வேண்டும்.

## செருமானியர் செயல்.

ருமேனியாவும், பல்கேரியாவும், ஜெர்மனிமீது போர் தொடுத்து விட்டதால் கருங்கடலில் நடவடிக்கை எடுத்து வந்த ஜெர்மன்போர்க்கப்பல்கள்தம் கடைசிப் படைத்தளங்களை இழந்துவிட்டன. எனவே அவை பகைவன் வசமாகாமல் தடுப்பதற்காகச் செர்மென் படையினர் அவற்றை மூழ்கடித்துவிட்டனர். தாம்அருமையாகச் செய்துபோற்றிப் போரிட்ட கப்பல்களாயிற்றே! இவற்றை எப்படி கடற்குள் அமிழ்த்துவது எனச் செர்மானியர் எண்ணி அழகு பார்த்துக்கொண்டிருந்தார்களானால் அக்கடற்படை நேசநாட்டார்வசம் சிக்கியிருக்குமன்றோ? சிக்கினால் ஜெர்மனியர்க்கே கேடுவிளைவிக்குமன்றோ? நம் பொருளாயினும் நமக்குக் கேட்டையும் இழிவையும் விளைவிக்குமானால் அப்பொருளை நாம் இறுகப்பிடித்துக்கொண்டு அழுவதா?

(4-ம் பக்கம் பார்க்க.)

## பொன்மலை திராவிட கழகம்.

3-ம் பக்கத்தொடர்ச்சி.

### உருசிய நாட்டினர் உயர்நலச்செயல்கள்

ரஷ்யநாட்டின்மீது திடிரெனச் செர்மானியர் பாய்ந்தனர். வேறுவகையால் படைசெய்ய வியாலாதெனக்கண்ட உருசியநாட்டினர் தாங்கள் அரிதின்முயன்று கட்டிக்காத்துவந்த, தங்கட்குத் தேவையாகவுள்ள தெனப்போற்றிவந்த பெரிய ஏரியின் அணையை உடைத்துவிட்டு ஊரெல்லாம் வெள்ளம் புரளச்செய்தனர். இதுமாத்திரமா? தாம் எவ்வளவோ வருந்திப்பாதுகாத்து உழைத்து விளைத்து அறுவடைக்குத் தயாராயிருந்த வயல்களின் தானியங்கள் பகைவனுக்குப் பயன்படும் எனக்கண்டவுடன் என்ன செய்தனர்? அடித்து அடித்துக் குதிரிற் கொட்டி உண்ண இருந்த விளைவயல்களில் உள்ள முற்றிய விளைவிற்கு எல்லாம் நெருப்பு வைத்துக்கொளுத்தி அத்தானியங்களை எல்லாம் சாம்பலாக்கினர். நம் உரிமைக்குத் தடையாயுள்ளவைகளையாம் என்ன செய்யவேண்டும்? நீவிரே ஆராய்ந்து பாருங்கள்.

### காஸ்னேவில் ஒரு காட்சி.

மேடையாகவும், கொத்தளமாகவும் அமைத்துக்கொண்டு பாதிரிமார் நிற்க வேண்டிய பாவசங்கீதனப்பெட்டியண்மையில் ஜெர்மனியர் நின்றுகொண்டு நேசநாட்டுப் படைவீரர்கள் புனிதமான வணக்கத்திற்குக் (கர்த்தரை) வணங்க வந்தால், வணங்கவரும் அத்துணை நேசநாட்டுப் போர்வீரரையும் செர்மனியர் வானுலகத்திற்கனுப்பி அங்கு தேவனை நேரே கண்டு வணங்கச்செய்தனர். அம்மடத்தின் உதவியால் நேசப்படைகளின் கண்ணில் செருமானியர் விரலைக்கொடுத்து ஆட்டினர். மடம் புனிதமான ஸ்தலமாயிற்றே என்று தயங்கியோசித்துக்கொண்டிருந்த நேசப்படைகள் ராணுவ அவசியத்தை உத்தேசித்துக்கடைசியில் அம்மடத்தை இடித்துத் தள்ளித் தரைமட்டமாக்கினர். இங்ஙனம் அவர்கள் இடித்துத் தள்ளவில்லையாயின் அப்புனித ஸ்தலம் நேசநாட்டுப் போர்வீரர்களையெல்லாம் ஏசுநாதரைச் சிலுவையிலறைந்தாற்போன்று அறையவன்றோ உதவி புரிந்திருக்கும்!

### பிஸித்தீவில் பெருங்காட்சி.

பிஸித்தீவில் குடியேறி, கரும்புபயிரிடுகின்றவர்கள் இந்தியர்கள். இவர்கள் பயிரிடுங் கரும்பைக்குறிப்பிட்ட விலைக்கு வாங்கி ஆலையிற் சாறாக்கிச் சர்க்கரையாக்கி ஏற்றுமதி செய்கிறவர்கள் ஒரு ஐரோப்பியக் கம்பெனியார். அத்தீவிலுள்ள இந்தியர்கள் இவ்வெள்ளைக்கம்பெனியார் குறிப்பிடும் விலைக்கே அக்கரும்பை விற்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். போர் காரணமாக எல்லாப் பொருள்களின் விலையும் ஏற்றமுறினும், கரும்புவிலை மட்டிலும் இருந்த நிலைமையிலேயே இருப்பது நியாயமன்று; அதிக விலைக்கு நீங்கள் கரும்பை வாங்க வேண்டுமென ஐரோப்பியரிடம் இந்தியர் முறையிட்டனர். வெள்ளை வியாபாரிகள் இவர்கள் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. பிஸியிலுள்ள இந்தியர் பேசாமலடங்கிக்கிடந்தனரா? தாங்கள் அருமையாய் உழைத்து நீர்பாய்ச்சிவியர்வையையும் உடன்பாய்ச்சி வளர்த்த அந்தக் கருப்பஞ்சோலைகளை நெருப்பிற்கிரையாக்கினர். இத்தகைய தியாக உணர்ச்சியுள்ள, உரிமையை நிலைநாட்டுதற்காக எல்லாவற்றையும் விடத்தயாராயுள்ளமக்கள் முனைந்து பணியாற்றினாலன்றித் திராவிட நாடுகிடைக்குமா? இத்தகைய தியாக உணர்ச்சியுடைய மக்கள் நம்மவரிலுள்ளனரென அறிந்தால்டாக்டர் இராசகோபாலாச்சாரி "பிராமணரல்லாதார்ஆதரவு பெரியார் ஈ. வே.ராவுக்கு ஒரு முகமாகக் கிடைத்தால் அது குறித்து யோசிக்கப்பெறு" மெனப் பாராமுகமாகக் கூறுவாரா?

திராவிடநாடு ஒரு தனிநாடு; திராவிடர்கள் உறுதியும் உணர்ச்சியுங்கொண்டவர்கள்; இவர்கள் ஒத்துழைப்பைப் பெறுவது நமக்கு நன்மை பயக்குமென்றுணராமல், மகமதலிஜின்னாவின் வாயிற்படியில் தவங்கிடக்கும் ஆரியர், திராவிட நாட்டையும், திராவிட நாட்டுமக்களையும் தங்களின் உடைமைப்பொருளாகநினைத்துக்கொண்டு விளையாட்டுரைகளும், நக்கலுரைகளும் நவில்வார்களோ?

இப்பேச்சுகள் மிகமிக ஆபத்தானவை என்பதை அவர்கள் உணரவேண்டும்; அன்றி அவர்கள் உணரும்படியாம்செய்ய வேண்டும். திராவிடநாடும் நாட்டுமக்களும் ஆரியர்களின் சொத்தா? ஆரியர்களின் சொத்தில்லையெனின் "இந்நாட்டிலுள்ள பிராமணரல்லாதாரின் ஆதரவு ஒரு முகமாகப் பெரியார் ஈ. வே, ராவுக்குக்கிடைத்தால் பிரிவினை குறித்து யோசிக்கப்படும், என டாக்டர் இராசகோபாலாச்சாரி நவில்வானேன்? திராவிட நாட்டிற்கும் ஏனைய இந்திய நிலப்பரப்பிற்கும் இவர் தாமே முடிசூட்டிக்கொண்டு கோலோச்சுபவர் போலவும், இவரிடம் நாடு வேண்டுமெனத் திராவிடர்கள் ஏதோ விண்ணப்பம் போட்டாற்போலவும், அவ்விண்ணப்பத்தை இவர் ஏதோ கருணையுடன் ஆராய்தற்கு உடன்படுபவர் போலவும், அப்புறம் ஆராயவும் பிராமணரல்லாதார் ஆதரவு பெரியார் ஈ, வே. ராவுக்குக் கிடைத்தால்தான் ஆராய முடியுமெனவும், தன்னை முழு இந்திய மன்னராக எண்ணிக்கொண்டு, ஆட்சிக்குத்தான் ஒருவரே உரிமையுடையவர் போல இறுமாப்புடன் பேசுகின்றார் இராசகோபாலாச்சாரியார். இவர்க்கும் இந்நாட்டிற்கும் என்ன தொடர்பு? இவர் யார் திராவிட நாட்டைப்பற்றிப் பேச?

### "ஜனாப் ஜின்னாவும் நாடும்"

ஜின்னாவின் பாகிஸ்தான் கொள்கையை ஆதரித்து மூலைக்கு மூலை யாம் மேடைகளில் பேசினோம். நம் பத்திரிக்கைகளிலும் ஆதரித்து எழுதினோம். நம் சொற்பொழிவால், நம் எழுத்தால் தென்னாட்டில் முஸலீம் லீகுற்குச் செல்வாக்கேற்பட்டது என்பதை அறியாதார் யார்? காங்கிரஸ் முஸ்லீம் கொள்கைகளைத்தாக்கியபோது யாம் ஆதரித்ததை யார் மறுக்கவியலும்; இங்ஙனம் முஸ்லீம் லீக் கொள்கையை முழுமனதுடன் ஆதரித்துப் பேசிப் பணியாற்றிய நம்மை ஆதரிக்கும் வண்ணம் முகமதலி ஜின்னாவை யாம் வேண்டிக்கொள்வது பாவமா? அவமானமா? அவர் நம் இயக்கத்தை ஆதரிக்கக் கடமைபட்டவர். அவரே ஆதரிக்கவில்லையாயினும், தன்னாட்சி மன்றம் (காங்கிரஸ்) ஆதரிக்கவில்லையாயினும், காங்கிரஸும் முஸ்லீம் லீகும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து ஒன்றாய்விட்டாலும், இவ்விரண்டு நிறுவனங்களையும் சேர்த்து எதிர்க்க நமக்கு உரிமையில்லையா? எதிர்க்காமல் விட்டுவிடத்தான்போகின்றோமா? இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகளில் இவ்விருகட்சிகளும் சிறிது பெரிய கட்சிகளாக இருக்கலாம். அதனால் ஏனைய கட்சிகள் இவ்விரு கட்சிகட்கும் அடிபணிய வேண்டுமா? இவ்விரு கட்சிகளும் கூடிகொண்டு நாட்டை ஆள எண்ணினால் தீவேலராவைப் போல யாம் உறுதியுடன் பணியாற்ற மாட்டோமா?

### 'புரட்சி தமிழர்க்குப்புதிதன்று'

எத்துணைப்பெரிய அரசையும் எதிர்த்து நியாயத்திற்காகப் போரிடுவது தமிழரின் பண்பு. எல்லாவல்லமையும்வாய்ந்த பாண்டியப் பேரரசனாகிய நெடுஞ்செழியனை ஒரே ஒரு தமிழ்ப்பெண்மணி கண்ணகி, சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு அப்பொழுதுதான் புதிதாகப் புகுந்தவள், எதிர்த்துஒழித்தாள். அம்மன்னனை மடித்ததோடு நிறுத்தினாளா? மதுரைமாநகரையும்தீக்கிரையாக்கினாள். அத்தகு வீரப்பெண்மணியின் வழிவந்த மக்கள் திராவிடர்கள்என்பதை இல்லாண்முல்லையின் இயல்பினை உணர்ந்தவர்கள் என்பதைப் பிறர்க்கு யாம் அறிவுறுத்தினோமா? ஒருதிராவிடப் பெண்பிள்ளையால் ஒரு பேரரசு சிதைத்தொழிக்கப்பட்டதென்றால் வீரமுள்ள, மீசையுள்ள இத்துணை ஆண்பிள்ளைச் சிங்கங்கள் கூடியுள்ளீர்களே! உங்கட்கு, ஆண்மையும் வீரமும் அஞ்சாநெஞ்சமும் உளவா? உளவாயின் எத்துணைமகாத்துமாக்களானாலென்ன, எத்துணைஆச்சாரிகளானாலென்ன? "திராவிடநாட்டைப் பெறுவோம்; அன்றிச் சுடுகாட்டிற்றுறுவோம்" எனமுழங்குங்கள்! நம்குறிக்கோள் நியாயமென உலகம் கூறும்பொழுது, நியாய

(9-ம்பக்கம் பார்க்க)

# இடமில்லை, வெளியேறுங்கள்!

"கூத்தாசன்"

கடந்த 1½ ஆண்டிற்குமுன் நாட்டில் ஏற்பட்ட வீண் கலவரத்தின்போது வெள்ளையரை நோக்கி, இங்கே உங்களுக்கு இடமில்லை, இந்நாட்டைவிட்டு வெளியேறுங்கள் என்று அக்கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்களால் கிளர்ச்சி செய்யப்பட்டதை நேயர்கள் அறிவர்.

இன்று அவ்வித கிளர்ச்சிகளும், கண்டனங்களும் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வித கிளர்ச்சி செய்பவர்கள் யார்? வெள்ளையரா இல்லை, இல்லை!

இந்நாட்டு அரசியல் விடுதலைக்கு முட்டுக்கட்டையாயிருந்து வரும் கட்சியும், மக்களின் பகுத்தறிவு உணர்ச்சிக்கு சிறிதேனும் மதிப்புக்கொடுக்காத அந்தராத்மாவின் அநுமதியைக்கேட்டு, அதன்படி நடந்து, அதனால் மேலும் பல இன்னல்களையும், பிளவுகளையும், உண்டாக்கிவரும் காந்தியாரைக் கடவுளாக்ப் பூசித்து வழிபட்டுவரும் கூட்டத்தினருமாகிய காங்கிரஸ கட்சியினர்தான் கம்யூனிஸ்ட் தோழர்களை நோக்கி உங்களுக்கு எங்கள் கட்சியில் இடமில்லை வெளியேறுங்கள் என்று சொல்லி வருகிறார்கள். உதாரணமாகச் சென்னையில் தோழர் மூத்துரங்கம் தலைமையில் கூடிய காங்கிரஸ்காரர்கள் கூட்டத்திலும், பம்பாயில் கூடிய காங்கிரஸ்காரர்கள் மகாநாட்டிலும் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கம்யூனிஸ்ட் தோழர்களை இவ்வாறு காங்கிரசிலிருந்து கழுத்தைப் பிடித்து, வெளியே தள்ளும் அவ்வித நெருக்கடி என்ன ஏற்பட்டு விட்டதென்று தோழர்கள் கேட்கக்கூடும்.

காந்தியாரின் சமயத்திற்கேற்ற வியாக்கியானங்களையம், சாணக்கிகளையும், கம்யூனிஸ்டுகள் எதிர்த்து வருகிறார்களாம், குறிப்பாக ஆகஸ்டு தீர்மானத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்து வருவது மிகவும் கண்டிக்கத்தக்கதாம்.

ஆகஸ்டு தீர்மானம் வெறும் வெத்துவேட்டு என்பதை நாடு அறியும். அத்தீர்மானம் இன்று நடைமுறையில் இல்லை என்று காந்தியாராலேயே பல முறை வியாக்கியானங்கள செய்யப்பட்டு வந்துள்ளது. ஆக அவ்வித உளுத்துப்போன தீர்மானத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் கம்யூனிஸ்ட்கள் காங்கிரசிலிருக்கயோக்கியதையில்லை யென்று கண்டிக்கப்பட்டு வருகிறது. உண்மையைக் கூறவேண்டுமானால் நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு என்பதற்கேற்ப, ஆகஸ்டு தீர்மானத்தில் ஏதோ பிரமாதமான கருத்திருப்பது போலக் காட்டுவதும், அதைக்கண்டித்துப் பிரசாரம் செய்யப்படுவதும், அதனால் காங்கிரசிற்கும், காந்தியாருக்கும், மதிப்புக் குறைவு ஏற்பட்டு விடுகிறதென்ற பூச்சாண்டி காட்டி, கம்யூனிஸ்டுகளின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும், ஆக அனைத்தையும் ஒருங்கே சேர்த்துப் பார்க்கும்போது, காங்கிரஸ்காரர்களின் புதிய அரசியல் நாடகத்திற்கு ஆக்கந்தேடும் தந்திரவழியென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

கம்யூனிஸ்ட் தோழர்களுக்காக வக்காலத்துவாங்க நாம் தயாராயில்லை. நம் நாட்டுத் தொழிலாளர் தோழர்களின் உணர்ச்சியைத்தவறானவழியில்செலுத்தி அவர்களை ஆட்டுமந்தைகளுக்குச்சமமான பரிதாப நிலைமையிலிருக்கும் அளவிற்கு செய்தவர்களில் முக்கியமானவர்கள் நம் நாட்டு கம்யூனிஸ்டுகள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இவ்வுண்மையை அவர்களும் அறிவர். இதற்குக் காரணம் அவர்களின் அறியாமையே யாகும்.

இந்நாட்டுத் தொழிலாளர்கள், தங்களின் அடிப்படையானகருத்திற்கேற்பச் சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்ற உண்மை உணர்ச்சியைச் சிறிதாவது சிந்தித்துப் பார்த்திருப்பார்களேயானால், தற்காலக் கம்யூனிஸ்ட் கோஷ்டியின் வலையில் சிக்குண்டு இருக்கமாட்டார்கள். அதேபோன்று தொழிலாளர் தோழர்கள்உள்ளபடியே தன்மான உணர்ச்சியுடன்வாழவேண்டும். அதற்காக நாம் பாடுபடவேண்டும் என்ற நேர்மையான கொள்கை கம்யூனிஸ்டுகளுக்கு இருந்திருக்குமேயானால் அவர்கள் காங்கிரஸ் கட்சியுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருக்க முடியாது.

இந்நாட்டுத் தொழிலாளர்களை என்றும் அடிமைப்படுத்தி வைத்திருப்பது எது? ஜாதிப் பாகுபாடுகளும், தலைவிதி, கடவுள் நம்பிக்கை, மூடப்பழக்க வழக்கங்கள் அல்லவா. அவ்வித குருட்டு வழக்கங்கள் ஒழிக்கப்படாத வரையில் தொழிலாளர்கள் உணர்ச்சி பெறமுடியுமா? இன்று காங்கிரஸ்காரர்களால் கேட்கப்படும் சுயராஜ்யத்தினால் தொழிலாளர்களுக்கு சிறிதளவாவது நன்மை ஏற்பட வழியுண்டா? என்பவைகளை நன்றாக நடு நிலையிலிருந்து சிந்தித்துப் பார்ப்பவர் எவரும் காங்கிரசை ஆதரிக்கும் கம்யூனிஸ்டுகளின் யோக்கியதையை ஒப்புக்கொள்ள முடியாது. இன்றுவரையிலுங்கூடத்தொழிலாளர்கள் கூட்டத்தில் அவர்களின் லெனின் களுக்காக எதையும் எடுத்துக்கூறாமல், உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், காந்தியார் வாழ்க என்ற "வீரர் ஜனை" புரிவதும், காங்கிரஸ்கொடியின்மேல் தொழிலாளர் கொடியை ஏற்றுவதுமான நாடகத்தில்தான் கம்யூனிஸ்டுகள்இருந்து வருகிறார்களே அன்றி, தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கான முறைகளை எடுத்துக் கூறுவதில்லை.

உளுத்துப்போன, ஆகஸ்டு தீர்மானத்தைப்பற்றி பேசுவதற்கே கம்யூனிஸ்டுகளுக்கு உரிமையில்லை யென்றால் காங்கிரசின் வளர்ச்சிக்கே அடிப்படையாயுள்ள மதம், கடவுள்போரால் நடக்கும் மூடப்பழக்கவழக்கங்கள், புராணக்குப்பைகள் முதலியவைகளை எடுத்துக்கூற கம்யூனிஸ்டுகளுக்கு சுதந்திரமிருக்கமுடியுமா? அவ்வித சுய உணர்ச்சியற்ற கம்யூனிஸ்டுகளைப் பின்பற்றும்தொழிலாளர்கள்தான் முன்னேற்றமடைய முடியுமா என்பதை இந்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் கவனிக்கவேண்டியது அவசியமல்லவா? எவ்வளவு காலத்திற்குத்தான் தொழிலாளர்கள் பயனற்ற உணர்ச்சியிலும், கிளர்ச்சியிலும் தங்கள் அரிய நேரத்தை வீணாக்குவது.

கம்யூனிஸ்ட் தோழர்களுட் பலருக்கு இவ்வுண்மைகள் தெரிந்தும் காங்கிரசை ஆதரிப்பதற்குக் காரணமென்ன? பார்ப்பனியத்தை வளர்க்க மறைமுகமாகச் செய்யப்பட்டுவரும் சூழ்ச்சி தவிர வேறுகாரணங்கள் இருக்கமுடியாது.

கம்யூனிஸ்ட் தோழர்களுக்குத்தான் இவைகளை எடுத்துக்கூறத் தைரியமில்லாவிடினும், மற்றவர்கள் அறிவுரை புகட்டும்போதாவது வாளாயிருக்கின்றனரா வென்னின் அதற்கும் எதிரிடையாகவேயிருந்து வருகின்றனர். உண்மையிலேயே அவர்களுக்குச் சிறிதளவாவது தன்மானஉணர்ச்சி இருந்குமேயானால் இனியாவது தொழிலாளர் கூட்டங்களில் காங்கிரஸ்கொடிகளைப்பறக்கவிடுவார்களா? அவர்கள்தான் அவ்விதம் செய்ய முற்பட்டாலும் நம் நாட்டுத் தொழிலாளர் தோழர்கள் அதைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியுமா என்று கேட்கிறேன்.

ஆகவே கம்யூனிஸ்டுகள் இரண்டுங்கெட்டநிலையிலிருந்து விலகித் தைரியமாகத்தங்களின்கருத்துக்களைஎடுத்துக்கூறமுன்வரவேண்டும். அல்லது காங்கிரஸ் ஜோதியிலாவது கலந்து விடவேண்டும். அதைவிடுத்துப் பாலுக்குங்காவல் பூனைக்கும் தோழன் என்ற முறையில் தொழிலாளர் இயக்கங்களிலும் அக்கறை காட்டுவதுபோல் நடிப்பதும், முதலாளித்தத்தவத்திற்கே அடிப்படையாயுள்ள மூடப்பழக்கவழக்கங்களின் சின்னமாகிய காங்

(7ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 5—11—44 ஞாயிறு


## ஏ! பொதுஜன உணர்ச்சியே!

ஆகஸ்ட் தீர்மானத்தின்பலனுக ஏற்பட்ட கலவரத்துக்குக், "கடுமையான பொதுஜன உணர்ச்சி"யே காரணமென, அபுல்கலாம் ஆசாத்தின் கையொப்பத்தோடு அ. இ. கா. கமிட்டியினர் பழைய வைஸ்ராய் பிரபுவுக்கு எழுதியகடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் சபையின் தூண்டுதலால் அக்கலவரம் ஏற்படவில்லையென்றும், அச்சபையின் தூண்டுதலாய்இருந்தால், "இதுவரையில் நடந்ததைவிட நூறுமடங்குக்குமேல் கேவலமானநிலைமை தேசத்தில் ஏற்பட்டிருக்கும்" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இக்கடிதமும், இதையொட்டிய வேறு பல அறிக்கைகளும், காங்கிரஸ் சபைக்கும் அக்கலவரத்திற்கும் தொடர்பில்லை என்பதை எப்படியாவது நிலைநாட்டிவிடலாம் என்ற எண்ணத்தோடேயே வெளியிடப்பட்டவைஎன்பதைநாம்எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. அக்கடிதமே அதை நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறது.

"காகம் உட்காரப் பனம்பழம் விழுந்தது" போல, ஆகஸ்ட்டுத் தீர்மானம் நிறைவேறியதற்கும் கலவரமுண்டானதற்கும் எப்படியோ பொருத்துமேற்பட்டுவிட்டதேதவிர, அத்தீர்மானம் இக்கலவரத்தை ஒருபோதும் தூண்டியதேயில்லைஎன்றும், பொதுஜன உணர்ச்சியே அதற்குக் காரணம் என்றும காங்கிரஸ் சபை கூறுமாயின், அடக்கமுடியாத பொதுஜனஉணர்ச்சி, ஆகஸ்ட்தீர்மானம் நிறைவேறியதும் பொங்கிவழியக் காரணம் என்ன? காங்கிரஸ்சபையின்தூண்டுதலில்லாத வெறும் பொதுஜனஉணர்ச்சியேதான் அக்கலவரத்திற்குக் காரணமென்றால், காங்கிரஸ்சபை, பொதுஜனங்களுடையஉணர்ச்சியை எந்தவகையில் வெளிப்படுத்துவது என்று பயிற்சி அளித்துவைத்திருக்கிறதென்பதையே அக்கலவரம்தெளிவாக்குகிறது. செய்வது இன்னது, செய்யவேண்டியது இன்னது என்று தெரியாத முறையிலேயேபொதுஜனங்கள் தங்கள் உணர்ச்சியை அள்ளித்தெளிக்கும்முறையில் காங்கிரஸ்சபை பொதுஜனங்களுக்குப் பாடம் கற்பித்திருக்கிறது என்பதையே அக்கலவரம் தெளிவாக்கியிருக்கிறது. இல்லையேல், இச்சொல்லப்படும் பொதுஜனஉணர்ச்சி இந்த முறையில் வெளிப்படக்காரணமேயில்லை.

நாட்டு நலன்குறித்த உண்மையான உணர்ச்சி காங்கிரஸ்காரர்களிடம் இருக்குமாயின், பொதுஜனவசதிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளபுகைவண்டி, தபால், தந்தி முதலிய இன்றியமையாப் போக்குவரத்துச் சாதனங்களை அழிப்பதுதான் அடக்கமுடியாத பொதுஜனஉணர்ச்சியா என்றுகேட்கிறோம். பொதுஜன உணர்ச்சி, பொதுஜனங்களின்வாழ்க்கை வசதிகளைக் குலைக்கும்கருவியாக மாறுவதை இங்கன்றி வேறெங்கேனும் கண்டதுண்டா அல்லது காணத்தான்முடியுமா?

உண்மையாகவே பொதுஜனங்களின் நலனைப்பாதுகாக்கும்முறையில் யாரிடமாவது உணர்ச்சியிருக்குமானால், அவ்வுணர்ச்சி பொதுஜனநலனைப் பாதிக்கும் முறையில் ஒருபோதும் ஈடுபடாது. எனவே, ஆகஸ்ட் தீர்மானம் அக்கலவரத்திற்குத் தூண்டுதலாய் இருந்ததால்தான் காங்கிரஸ் பொதுஜனங்கள் பொதுஜன வசதியைக்குலைக்கும் அழிவுவேலையைச் செய்தனர் என்று ஓரளவு அறிவுபெற்றவரும் கூறுவர். இதனைமறுப்பவர் உண்மையை மறைப்பவரேயாவர்.

காங்கிரஸ்காரர்களிடம் இத்தகைய பொறுப்பற்ற பொதுஜனஉணர்ச்சி இருப்பதால்தான், இவர்களின் கலப்பற்ற தனிஅரசுரிமைவேண்டுமென்று திராவிடர்களும் முஸ்லீம்களும் விரும்புகின்றனர் என்பதை நாம் வலியுறுத்திக் கூறுகிறோம்.

மற்றப்படி, நாம் பிரிட்டிஷாருக்காக வக்காலத்துவாங்கிப் பேசுவதாக எவரும் கருதவேண்டாம் சுயஆட்சிபெறுவதில் காங்கிரஸ்கட்சிக்கு மற்றக்கட்சிகள் சளைத்ததல்ல என்பது, அன்னியரின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுதற்கா[illegible] திராவிடநாட்டுப் பிரிவினையைப் பெரிதும் வற்புறுத்தி வருவதிலிருந்து நன்கு விளங்கும். ஆனால், காங்கிரஸ்காரர்போல் திராவிடர்கள் தமது உணர்ச்சியைப் பொது ஜனங்களுக்குக் கேடுண்டாக்கும் முறையில் வெளிப்படுத்திச் செயல்புரியமாட்டார்கள். அடக்கமுடியாத பொதுஜனஉணர்ச்சி ஏற்படுமானால், அதனால் அளவிடமுடியாத பொதுஜன நன்மைகள் உண்டாகும்முறையிலேயே அவ்வுணர்ச்சி வேலைசெய்யும்என்பதையும்தெரிவித்துக்கொள்கிறோம்.

---

### மாணவர் மன்றம்.

தாரண ஆண்டு அற்பசித் திங்கள் 13-ல் விருத்தாசலம் தமிழ் மாணவர் மன்றத்தின் கூட்டம் மாணவத் தோழர். நா. இராதாகிருட்டினன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திராவிடர்கழக உறுப்பினர் தோழர். ஏ. சி. பொன்அரசன் தமிழ்நாடும் மாணவரும் என்பதுபற்றியும், சின்னசேலம் தோழர். கலாமணி அவர்கள் திராவிடத்தின் பிரிவினைக்கொள்கையை விளக்கியும் பேசினர்.

### இளைஞர் தமிழ்க்கழகம்.

சைதாப்பேட்டை.

மேற்படி கழகத்தின் சார்பில் 29-10-44 மாலை 4-30 மணிக்கு "கணபதிநேஷனல் பாடசாலை" ஹாலில் திராவிடநாட்டுக்கோரிக்கையைப்பற்றி ஒரு சொற்போர் நிகழ்ந்தது. அவ்வமயம் கழகத் தலைவர் தோழர். எஸ். சாமிக்கண்ணன் அவர்கள் "தமிழ்நாடு உய்யவழி திராவிடஸ்தானை ஏற்றுக்கொள்வதே" என்ற தீர்மானத்தைக்கொண்டுவந்து, அப்பொருள்பற்றி நீண்டநேரம்பேசினார். தோழர். எஸ். வி. [illegible] அத்தீர்மானத்தை ஆமோதித்துப்பேசினார். லயலோக்கல்லூரித்தோழர். சௌந்தரராசன் தீர்மானத்தை எதிர்த்துப்பேசினார். பச்சையப்பன் கல்லூரித் தோழர்கள் கே. வெங்கிடாசலம், சண்முகசுந்தரம், அந்தோனிசாமி, தணிகாசலம் முதலியவர்களும், மற்றும் பலரும் தீர்மானத்தை ஆதரித்துப்பேசினர்.

சொற்போர் நிகழ்ந்தபின்னர், தீர்மானம் நடுநிலையாளர் தோழர். வேம்பு ஐயர் அவர்களால் ஓட்டுக்குவிடப்பட்டு, பெருவாரியான ஓட்டுக்களால் வெற்றியடைந்தது.

---

### இறுதிக்கடன்.

சிதம்பரம்.

சாலியன் தோப்புக் கிராமத்தில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் முத்துக்குமாரசாமி உடையார் அவர்களின் தந்தை வெங்கடாசல உடையார் மறைந்தமைக்கு 22—10—44ல் சிங்காரவேல் அடிகள் தலைமையில் தோழர்கள் ரா, மு. மாணிக்கம்-தண்டபாணி பின்னுஞ்சிலர் சொற்பொழி வாற்றலோடு இறுதிக் கடனை முடித்தனர். சிதம்பரம் திராவிடர்கழகத்துக்கு ரூபாய் 3ம் குடி அரசு திராவிட நாட்டுக்கு முறையே ஒரு ரூபாயும் நன்கொடை தரப்பட்டது.

---

### உசிலம்பட்டியில் பிரபல நாடார்

## திருமணம்.

அக்டோபர் 28—10—44ல் பாங்கரும் பிரபல வியாபாரியுமான தோழர் தெ. ரே. மா. சிவசுப்பரமணிய நாடார் அவர்கள் குமாரர் ரெங்கநாதனுக்கும் பிரபல வியாபாரியும்ஸ்டாண்டர்டு வாகும் ஆயில் கம்பெனி ஏஜண்ட் தோழர் வ. அ. க. லெட்சுமண நாடார் அவர்கள் புத்திரி கமலாவுக்கும் திருமணம் தமிழர்சீர்திருத்தமுறையில் தோழர். ராவ்சாகிப், பெ. சி, சிதம்பர நாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## இடமில்லை வெளியேறுங்கள்.

5-ம் பக்கத்தொடர்ச்சி

கிரசுடன் உறவு வைத்துக்கொண்டு வருவதுமான காரியங்கள் மேலும் நீடிக்கப்பட்டுவரின் காங்கிரஸ்காரர்கள் கிளர்ச்சி செய்வதுபோன்று இந்நாட்டுத் தொழிலாளர்களும் கம்யூனிஸ்டுகளை நோக்கி எங்கள் இயக்கத்தில் உங்களுக்கு இடமில்லை, வெளியேறுங்கள் என்று கூறும் நாள் சீக்கிரமே வரும் என்பதில்ஆச்சரியமில்லை.

தொழிலாளர் தோழர்களும் இனித் தங்களின் நிலைமையை உணர்ந்து அவர்கள் எந்தக்கட்சியினராயிருந்தபோதிலும் சரி அவர்களின் வாழ்விற்கே பெரும் கேடுகளை விளைவித்துவரும் மூடப்பழக்க வழக்கங்களின் விபரீதங்களை விட்டொழித்துத்தன்மான உணர்ச்சி பெறுவதற்கான வழிகளைத்தேட வேண்டியது மிக இன்றியமையாததாகும்.

நாடெங்கும் நடைபெற்றுவரும் தொழிலாளர் இயக்கங்களில் அவைகளை நன்கு எடுத்துக்கூறி அச்குருட்டு நம்பிக்கைகளை விட்டொழிக்க முயலவேண்டும். அதற்கு ஏற்ற சமயமும் இதுவேயாகும். வீண்ஆர்ப்பாட்டங்களிலும், பேச்சுகளிலும் சுலோகங்களிலும் நம்பிக்கை வைத்து அடிமைப்பட்டது போதும். இனியேனும் இந்நாட்டுத் தொழிலாளர்கள் தன்மான உணர்ச்சி பெற்றுச்சுதந்திரத்துடன் வாழ்வதற்கான முறையில் ஈடுபடவேண்டியதுடன் அறிவியக்கங்களில் பங்கு கொண்டு ஆவனசெய்யவேண்டும். தொழிலாளர் சமூகத்தைத் தவறான வழியில் செலுத்தி அவர்களை என்றும் அடிமைப்படுத்தி வைக்க முயலும் கூட்டத்தினர் எவரேயாயினும் அவர்களை நோக்கி இனி உங்களுக்கு எங்கள் இயக்கத்தில் இடமில்லை வெளியேறுங்கள்!! என்று தொழிலாளர் தோழர்கள் உறுதியுடன் கூறி உண்மை உணர்ச்சி பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## தமிழ்த் திருமணம்.

கருவூர் வட்டம் சிவந்திப் பாளையம் தோழர். பி. சிங்காரவேலுக்கும், கடம்பன் குறிச்சித் தோழியர் ப. கமலத்திற்கும் 27—10—44 வெள்ளியன்று மணமகனில்லத்தில் வேலூர் கண்டர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வை. பொன்னம்பலனார் அவர்கள் தலைமையில் வாழ்க்கைஒப்பந்தமும் சீர் திருத்தச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன. திருமண நினைவுகுறித்துத் திராவிட நாடு; குடி அரசு வளர்ச்சி கருதி முறையே இரண்டிரண்டு வெண்பொற்காசுகள் மணமக்களால் அளிக்கப்பட்டன.

## திராவிடமாணவர் கழகத் திறப்புவிழா.

29—10—44ல் பொன்மலை இந்தியன் இன்ஸ்டிடியூட்டில் டை கழகத் திறப்புவிழா கரந்தை தமிழ்ச்சங்க பிரின்ஸ்பால் பி. ஆர். மீனாட்சிசுந்தரம் M. A; அவர்கள் தலைமையில் வெகுவிமரிசையாய் நடைபெற்றது.

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழாசிரியர் கோ. சி. பெரியசாமிப் புலவர் திறந்து வைத்தார்.

கே. அன்பழகன் பி. ஏ. (Hons) பி. சனார்த்தனம் பி.ஏ; டி. கே. சீனிவாசன்; இ. ரா. நெடுஞ்செழியன் பி. ஏ; (Hons) ஆகியோர் மிகவிளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

## கவுரவ மேஜிஸ்டிரேட்.

நாகை ஜஸ்டிஸ் பார்ட்டியின் உப தலைவரும், கோவாப்ரேட்டிவ் பாங்கியின் காரியதரிசியும், பிரபல வியாபாரியுமான தோழர். எஸ். பி. கே. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் நாகை கவுரவ பெஞ்சு மாஜிஸ்டிரேட்ஆக நியமனம்செய்யப்பெற்றது பற்றி மகிழ்ச்சியடைவதோடு, தகுதியை உணர்ந்து நியமனம்செய்த சர்க்காரையும் பாராட்டுகிறோம்.

## திருமண நிகழ்ச்சி.

தென்னாற்காடு மாவட்டம் திட்டக்குடி லோக்கல்பண்டு பஞ்சாயத்துபோர்டு மெம்பரும், பிரபல தோல்வர்த்தகருமான தோழர். பி. நாராயணன்அவர்கள் சகோதரர் தோழர். பி. முத்துச்சாமி அவர்கள் புதல்வி அம்புசவல்லிக்கும், மேலப்புவனகிரி இராமலிங்கம் புதல்வன் பழனியப்பனுக்கும் (13—9—44) சிங்காரவேல் அடிகள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் மணமகள் இல்லத்தில் நடத்தப்பட்டது.

# திருமணம்.

25—10—44தேதி தூத்துக்குடி திராவிடர் கழகத்தின் உபதலைவர் S. O. வெற்றிவேல் அவர்கள் புதல்வி பாரதமணிக்கும், சாத்தான் குளம் S. திரவியம் B. A. க்கும் W.P.A.சௌந்திரப்பாண்டியன் தலைமையில் A.பொன்னம்பலனார் வாழ்க்கை ஒப்பந்தம் நடத்திவைத்தார் திராவிட நாடு வளர்ச்சிக்கு மூன்று ரூபாய்கள் கொடை அளிக்கப்பட்டது

## சென்னை பார்க் டவுன் திராவிடத் தோழர்களுக்கு அறிவிப்பு.

டை வட்டத்திலுள்ள திராவிடத் தோழர்களே! நமது வாழ்க்கையின் சகல துறைகளிலும், அடிமைப்பட்டு, தன்மானமற்று, வாழும்இந்நிலைமாற்றமடைய ஒரேவழியாகிய, சுதந்திரத் திராவிடநாடு நமது ஆட்சிக்குள்அடங்கவேண்டும் என்பதை நீங்கள் உணருகின்றீர்களா? திராவிடநாட்டைமீட்கும், புரட்சியில் நீங்களும் பங்குபெறவேண்டுமானால் இன்றே, திராவிடர்கழகத்தில், அங்[illegible]ரு, சான்கு, செலுத்தி, ரசீதுபெற்றுக்கொள்ளுங்கள்.

அங்கத்தினர்கள் சேர்க்குமிடங்கள்.

1. (காலை, 7 மணிமுதல், 10 மணி வரை.) கே.கோவிந்தசாமி நர் 5.காளப்ப ஆச்சாரிதெரு. பார்க்டவுன். சென்னை.

2. (மாலை, 7 மணிமுதல், 9 மணி வரை. (ஜி.பார்த்தசாரதி. நர் 12. பிள்ளையார்கோவில் தெரு. பார்க்டவுன், சென்னை.

கே. கோவிந்தசாமி. செயலாளர்,
பார்க்டவுன் திராவிடர் கழகம்,
சென்னை.

## நாராயணன்—செகதாம்பாள் சீர்திருத்தத் திருமணம்.

துறையூரில் 27—10—44ந் தேதி நாராயணனுக்கும் ஜெகதாம்பாளுக்கும் ஜனார்த்தனம் B. A. அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. அது சமயம் திராவிடர் கழகத்தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் சீர்திருத்தமணத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசினார்.

## திராவிடர் கழகத்திறப்புவிழா.

உறையூரில் 11—11—44 அன்று திராவிட இளைஞர்க்கழகம் திறந்துவைக்கப்படும். அன்றுமாலை 6-30 மணிக்கு டவுன்ஹால்கட்டிடத்தில் கோ. சி. பெரியசாமிப் புலவர், பி. ஜனார்த்தனம், ஏ. கே. பாஷா, பெரியார் ஈ. வே. ரா. பேசுவார்கள். தி. போ. வேதாசலம் தலைமை வகிப்பார், அனைவரும் வருக.

## மறைவு.

பெத்துநாயக்கன்பாளையம் தோழர் M. A. பழனிமுத்துக்கவுண்டர்இயற்கை எய்தின நினைவுக்குறியாகத் திராவிட நாடு இதழுக்கு ரூ. 1. [illegible] தரப்பட்டது.

# தமிழ்நாடு திராவிடமாணவர் மாநாடு.

நவம்பர் 12 ஞாயிறன்று மதுரை, விக்டோரியா எட்வர்ட் ஹாலில் நிகழ்பெறும்.

**காலை 9 மணிக்கு மாநாடு துவங்கும்.**

*தலைவர்:—*

பி. ஜனார்த்தனம் பி. ஏ; பச்சையப்பன் கல்லூரி.

*திறப்பாளர்:—*

Dr. ஏ. கிருஷ்ணசாமி பார்-அட்-லா [லிபரேட்டர்]

*தமிழ்க்கொடியேற்றம்:—*

திருமதி. கே. மிராண்டா பி. ஏ;
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

*மாணவக் கொடியேற்றம்:—*

ஆர். கண்ணப்பர் சேலம் முனிசிபல் கல்லூரி.

பெரியார் ஈ. வெ. ரா. தலைவர் பாண்டியனார். தோழர் அண்ணாத்துரை, மாஜிமந்திரி. எஸ். ராமநாதன், அன்பழகன், நெடுஞ்செழியன், கார்மேகப் பெரிய சாமிப் புலவர், பொன்னம்பலனார், சி. பி. சிற்றரசு, நயினா முகம்மது, பி. ஏ; முதலியோர் அறிவுரையாற்றுவார்கள்.

திராவிட மாணவர்களைத் திரண்டுவருமாறு அழைக்கிறோம்.

வரவேற்புக்கழகத்தார்.

## வேண்டுகோள்.

திராவிடர் கழக அங்கத்தினர் சேர்க்கும் தோழர்கள் 30—10—44க்குள் அங்கத்தினர் சேர்த்த ரசீது புத்தக அடிக்கட்டையையும் சந்தா வசூல்தொகையையும் தயவுசெய்துஎனக்குச் சேரும்படி அனுப்பிவைக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன். நவம்பர் முதல் வாரத்தில் கும்பகோணம் அங்கத்தினர் லிஸ்டு அனுப்ப வேண்டியதிருப்பதால் துரிதமாகமெம்பர்சேர்த்துக்கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

K. K. நீலமேகம்.
திராவிடர் கழகம்,
கும்பகோணம்.

---

## திராவிடர் கழகம்.

குறிஞ்சிப்பாடி.

29–10–44 ல்

குறிஞ்சிப்பாடி வாணியர்தெருவில்திராவிடர் கழகத்தின்சார்பில் தோழர் ப. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கடலூர் தோழர்கள் வை. சிதம்பரநாதன், சி. இளவழகன், சி. வீரமணி, ஆ. திராவிட மணி ஆகியோர் திராவிடர் கழகத்தின்திட்டங்களைப்பற்றிப் பேசினார்கள். இரா. சரவணன் நன்றி கூறினார்.

## திராவிடர் கழகம்.

கொழும்பு.

திராவிட இளைஞர்கழகத்தின் மாதாந்திரப்பொதுக்கூட்டம்சென்ற 8-10-44ல் [illegible] தோழர் டி. எம். ஏ. ஹமீது அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம், சேலம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பூர்ணமாக ஆதரிப்பதோடு, அதற்கு விரோதியாயிருப்பவர்களை வன்மையாகக் கண்டிப்பதெனவும், அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறும் இக்கூட்டம் திராவிடர் கழகத்தலைவர்களை வேண்டிக்கொள்கிறது.

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் பெயரில் பூர்ணநம்பிக்கை தெரிவிப்பதோடு அவரே நிரந்தரத் திராவிடர் தலைவராக இருக்கவேண்டுமென்று இக் கூட்டம் கோருகிறது.

---

## திராவிடர் கழகம்

கீழதேவதானம், திருச்சி.

ஷை கழகத்தின்சார்பில் 22—10—44 கீழதேவதானத்தில் பொதுக்கூட்டம் மாலை 6-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுப், பொன்மலைத் தோழர், நாத்திக எம். நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடத்தப்பெற்றது.

## திராவிடர் கழகம்.

மேலச்சேரி.

செஞ்சித் தாலுக்கா மேலச் சேரியில் 7—10—44 சனிக்கிழமை மாலை 7-மணிக்கு திண்டிவனம் திராவிட கழக உபதலைவர் ரா. வெங்கிடேசன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் திறக்கப்பட்டது.

தூத்துக்குடி.

8-10-44விருதுநகர் ஆ. வ. ப. ஆசைத்தம்பி தலைமையில், திராவிடர்கழகத்திற்கு C. நீதிமாணிக்கம், M. S. சிவசாமி V.S. கோமதிநாயகம் D. தங்கையா ஆரோன் ஆகியவர்களை முறையே தலைவர், செயலாளர்பொருளாளர் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று 950 அங்கத்தினர்களும் சேர்க்கப்பட்டனர்.

சேத்தூர்.

4—10—44-ல் தெ. இ. ந. உ. சங்கக் கூட்டம். திரு. க. நவநீதகிருட்டினன் அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் அவர்களால் சங்கத்தின் திட்டங்களைப்பற்றியும்சேலம் மாநாட்டுத் தீர்மானத்தின்படி நமது தெ. இ. ந. உ. சங்கம்என்றுஇருந்ததைத் திராவிடர் கழகம் என்று மாற்றுவதெனத்தீர்மானிக்கப்பட்டது.

---

## புத்தர் பொன் மொழி

"இது விசேஷமாக நல்லதென்றாவது இது விசேஷமாக கெட்டதென்றாவது கேள்வி மாத்திரத்தாலேயே அதை நம்ப வேண்டாம். உண்மையாக இல்லாமற் போனால் எழுதிவைத்திருப்பார்களா என்று எண்ணி, அதனாலேயே உண்மையென்று தீர்மானிக்கவேண்டாம். அநேக இடங்களில் வழங்கிப் பாரம் பரியமாக வந்த ஐதீகமென்று அதனாலேயே அதில் நம்பிக்கை வைக்கவேண்டாம். ஒரு விஷயத்தை அநேகர் நம்புகிறார்களேயென்று அதனாலேயே அதை நம்பவேண்டாம்: அநேகர் நம்புவதால் அதனாலேயே அது உண்மை என்று நினைக்கவேண்டாம். ஒரு மகாத்மாவால் வரையப்பட்ட கதை என்று காட்டப்பட்டதினாலேயே அதை நம்பவேண்டாம். ஆச்சரியமாயிருப்பதால் தேவனாலோ அல்லது அற்புதமான ஒருவனாலோ செய்யப்பட்டதென்று நீ கற்பனை கொண்டதனாலேயே நம்பாதே. பெரியோர்களாலும், குருமார்களாலும் சொல்லப்பட்டவை யென்று அதனாலேயே நம்பாதே. உத்தேசித்த விஷயங்களை நம்பாதே, ஒவ்வொரு விஷயங்களையும் ஆராய்ச்சி செய்து சகலருக்கும் அது நன்மையைத் தருவதென்று உணர்வாயாகில், அப்பொழுது அதை ஒத்துக்கொள், அதே பிரகாரம் நட."

## பொன்மலை திராவிட கழகம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மானகுறிக்கோளை அடையயார் தடை விதித்துவிடுவார்கள்? "நெற்றிக்கண்காட்டினும் குற்றம் குற்றமே" என ஒரு தமிழ்ப்புலவன் துணிந்துரைத்தான். அத்தகு துணிவு நம்வாலிபர்களுக்குவரவேண்டும். "ஜின்னு புத்திபுகட்டினுர்" பெரியார்க்குஎனச் சில போலிகள் கூறுகின்றனர், காங்கிரஸ்காரிடம் நீ ஏமாந்துவிடாதே சஹுப் ஜின்னு" என்று பெரியார் சஹுப் ஜின்னுவுக்குப் புத்தி புகட்டியதை இப்போலிகள் அறிவார்களா? இஃதிருக்கட்டும், திராவிடநாட்டுப் பிரிவினை ஒரு ஜின்னுவிடமோ ஒரு பெரியாரிடமோ ஒப்படைக்கப்பெற்றுளதா? இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உணர்ச்சியின் உருவமாய்ப் பெரியார் விளங்குகின்றூர், என்பதற்காக இன்று பெரியாரைப் பிரிவினைகேட்கச் சொல்லுகின்றேம். எங்கட்காகப் பெரியார்பேசுகின்றூர், பெரியார்பேசி, ஒரு ஒழுங்கில் வாலிபர்களைச்செலுத்தாவிட்டால் உள்நாட்டுக்குழப்பம் விளையாதாமோ? பெரியாரன்றேவாலிபர்களின் உணர்ச்சிவெள்ளத்தைத் தடுத்துத்தேக்கி வைத்துள்ளார். பிரிவினைத்திட்டம் ஜின்னுவையும் பெரியாரையும்விடப்பெரியது என்பதை இப்போலிகள் அறிவார்களாக!

**எது துவேஷக்கூச்சல்?**

டாக்டர் ஆச்சாரியார் கூறுகின்றூர் திராவிடநாட்டுப் பிரிவினைக்கூச்சல்துவேஷக்கூச்சலென்று; யாம்கூறுகின்றேம் நியாயக்கூச்சலென்று. ஆச்சாரியாரின் அமைச்சுறுப்பில் ஒருவராயமைந்து அவர் வீட்டில்தங்கியே இன்புறுத்திய இராமநாதன், மாஜிவிளம்பர மந்திரியவர்களும் கூறுகின்றூர் நியாயக்கூச்சலென்று. உலகம்கூறுகின்றது நியாயக்கூச்சலென்று. மகமதலி ஜின்னு கூறுகின்றூர் நியாயக்கூச்சலென்று. ஆச்சாரியார் துவேஷக்கூச்சல்என்கிறூர். இந்தியைத் தென்னாட்டில் சட்டத்தின்மூலம் கட்டாயமாகப் புகுத்தியகாலத்தில் சட்டசபையில் 'ஆரிய விரோதிகளாகிய ஒரு இராமசாமியும் ஒரு பாரதியுந்தான் இந்தியை எதிர்க்கின்றூர்கள்" எனக்கூறினுர் ஆச்சாரியார். அதே நேரத்தில் ஆச்சாரியார் வீட்டுவாயிலில் "இராமசாமி எதிர்க்கவில்லை யாங்கள் எதிர்க்கின்றேம்" எனத்திராவிட வாலிபர்கள் தமிழ்க்கொடியைக் கையிலேந்தி நின்று மறியல்செய்து அவர்க்கு அறிவுறுத்தினர். ஆச்சாரியார் சேவகர்பாதுகாப்பில் அவர்களைச் சிறைக்கனுப்பிவிட்டுச் திருச்சிராப்பள்ளிக்கு ஊர்சுற்றிப் பார்க்கவந்தார், திருச்சிராப்பள்ளிசெருப்புத்தோரணம்நாட்டி ஆச்சாரியாரை வரவேற்றுயாங்கள் இந்தியை எதிர்க்கின்றேம் என்று உணர்த்திற்று. திருச்சிக்கு வந்தார், கருப்புக்கண்ணுடிக்காரர். கறுப்புக்கொடியை இந்தி எதிர்ப்புத்தொண்டர்கள் அவர்கைபிற்கொடுத்தனர். இவற்றிற்குப் பிறகு உணர்ந்தார் இந்தியை யார் எதிர்க்கின்றனர் என்பதனை. "ஐயையோயான் இந்திச் சனியனைத் தெரியாமல்புகுத்திவிட்டேன்" எனஆச்சாரியார்அன்றுஅலறினுர். அதேபோன்று இன்று நாட்டுப்பிரிவினைவேண்டுமென ஒரு இராமசாமிதான்கேட்பான். அந்த இராமசாமியார் என்பதை ஆச்சாரியார் இங்கு சிந்திக்கநேரமில்லையாயினும், வடநாட்டிற்கேகித் தம்சம்மந்தியின் பக்கத்திலமர்ந்து "அந்தஇராமசாமியும்(மறைந்த) நாகம்மையும் திராவிடநாடுகேட்கின்றனர்; அவர்களைத் துரும்பெனமதித்து யான்பேசிவருகின்றேன்; அவ்வாறுபேசலாமா?" எனமாகாத்மா காந்தியை இவர் கேட்கட்டும்! உடனே அவர் அந்த ராத்மாவின் துணையின்றி அன்பாய சம்பந்தியாரே! வேண்டாம்!! வேண்டாம்!!! இராமசாமியை முதன்மையாய்நிறுத்தி நாம் இராமஇராஜ்யத்தைநாட்ட ஒரு காலத்தில் முயற்சித்தோமா? இல்லையா? அவரையா துரும்பெனமதித்து இப்படித் தாக்கிப்பேசுவது? கூடாது! கூடாதுஎன ஆணையிடுவார். அவர்ஆணையிலும் ஆச்சாரியாருக்கு நம்பிக்கையில்லையேல், மீண்டும் திருச்சி, பொன்மலைப்பக்கம்வந்து திராவிடநாடு யார்கேட்கின்றூர்கள் என்பதை இங்குள்ளோரிடம்கேட்டுத் தெளிவாராக!

நம்மை ஒதுக்கிவிட்டு இவர்கள் எந்த வகையில் சுயராஜ்யம்பெறுவார்கள் என்பதைப்பார்த்துத்தான் சாகப்போகின்றேம்!

**மாணவர் கடமை.**

1941-ம் ஆண்டு டிசம்பர்த்திங்களில் பதிஞுருட்டை வயதினளாகிய ரஷ்ய நங்கை டான்யாவை, கல்விபயின்றுவந்த கல்லூரிமாணவியை, ஒற்றுவந்தாள் என்பதற்காகச் செருமானியர் போர்முகத்தில் பாசறையில் சிறைபிடித்தனர். சிறைபிடித்து அவளை எவ்வளவோ துன்புறுத்தியும் அவள் உண்மையை உரைத்தாளில்லை. கடைசியில் இரக்கமற்ற நாஜிகள் அவளைத் தூக்குமேடையிலேற்றிக்கொல்லத்துணிந்தனர். தன்உயிரைத் துரும்பெனஎண்ணிய அந்த டான்யா தூக்குமேடையில் ஏறிநின்றுகொண்டு "ஏ! ரஷ்யநாட்டுமக்களே! பயப்படாதீர்கள்! ஒன்றுபடுங்கள்! ஒன்றுபட்டுப்போராடிப் பகைவனைவென்று ஆண்மையை நிலைநாட்டுங்கள்! சிங்கமெனச்சீறிப் போராடுங்கள்! ஸ்டாலின்சொல்லைக்கேளுங்கள்! சூடினுல் வாகைமாலை; இல்லையேல் சாவோலைஎன முழங்குங்கள்!" எனக் கூறித்தூக்குமேடையில் உயிர்துறந்தாள். நாட்டிற்காகத் தன்உயிரையேபலியிட்ட நங்கையைநாடுமறக்குமோ? தூக்குமேடையில் ஏறிநின்று அப்பெண்கூறியவீரவுரை ருஷ்யநாட்டுப் பெண்களையும், ஆண்களையும், மாணவர்களையும் போர்வெறிபிடிக்கச்செய்தது. அந்நாட்டுமக்கள் போர்வெறிகொண்டு நாஜிகளைஎதிர்த்துப் போரிட்டார்கள். நாஜிகளைப் புறமுதுகிட்டோடச்செய்தார்கள். இவைமாத்திரமா? செர்மனிக்குள் செஞ்சேனைகளை அழைத்துச்செல்லுகின்றது அவ்வீராங்கனையின் வீரவுரை. இத்தகு கல்லூரி மாணவிகள் திராவிடநாட்டிலுள்ளனரா? மாணவர்களுள்ளனரா? அப்பெண்மணியைப்போன்ற நாட்டுப்பற்றுடைய நன்மக்களன்றோ நம் நாட்டில்வாழவேண்டும் "வாழ்க டான்யாவின்வீரம்; வீழ்க நாஜியக்கொடுமை" எனரஷ்யா அவள்வீரத்தை வாழ்த்தியது. உலகவரலாற்றில் அவ்வுத்தம நங்கைஇடம்பெற்றாள். நம்நாட்டு வாலிபப்பெண்கள் சோப்பும் சீப்பும் உடையும் சடையும் குடையும்கொண்டு உலாவப்போகின்றனரா? நாட்டின் விடுதலைக்கு உழைக்கப்போகின்றனரா? திராவிடநாட்டுப்போராட்டம் நம்நாட்டு ஆண் பெண் மாணவர்கள் எல்லோரையும் விழிப்புறச்சொல்கின்றது; விழிப்புற்று வேண்டியனபுரிந்து வெற்றியுறுவாராக! திராவிடநாடு திராவிடர்க்கே.

---

## திராவிடர் கழகம்.

8—10—44-ல் சென்னை நுங்கம்பாக்கம் S. பாலசுந்தரம் அவர்களின் இல்லத்தின் மேல்மாடியில் திராவிடகழக அங்கத்தினர்கள்கூடி S. பாலசுந்தரம் அவர்களைத்தலைவராகவும், V. சங்கரநாராயணன் அவர்களைச்செயலாளராகவும், A. இராசலிங்கம் அவர்களைப் பொருளாளராகவும் மற்றும் 11 நிர்வாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

---

## திராவிடர் கழகத் திறப்புவிழா

### குளத்தூர்

15—10—44 மாலை 7-மணிக்கு இவ்வூர் 'விக்டரி அவுஸ்' முன்பாக தோழர் K. முத்தய்யா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. பெரியசாமி, ச. சிவசாமி, முருகேசபாண்டியன் முதலியவர்கள் கழகநோக்கம், அவசியம் என்பதுபற்றிச்சொற்பொழிவு ஆற்றினுர்கள்.

---

## ஆதித்திராவிட வாலிபசங்கம்

### எலவம்பட்டி

ஆதிதிராவிட வாலிப சங்கப்பொதுக்கூட்டம் சென்ற 14—10—44 மாலை 6-30 மணிக்குத் தோழர்சேடப்பட்டி S. R. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடந்தது. தலைவர் அவர்கள் "தற்கால யுத்தமும் நமது கடமையும்" என்பதைப் பற்றியும், "கல்வி" 'சுதந்தரம்' 'தனித்தமிழ்'என்பதைப்பற்றியும்மிகவும் விளக்கமாக விரிவுரை நிகழ்த்தினுர்.

## திராவிடர் கழகம்.

**தாசூர்.**

14—10—44 மாலை சிதம்பரந்தாலுக் காதாசூரில் புதிதாக, "திராவிட இளை ஞர்கழகத்" திறப்புவிழா சித்தலூர் கிரா மாதிகாரி கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் புருஷோத்தமன் தனபால் முதலியவர்களின் தமிழிசையும், கூளப் பாடி சிங்காரவேல், பூந்தோட்டம் தில் லைக் கோவிந்தசாமி, காசிநாதன் முதலிய வர்களுடைய சொற்பொழிவுகளுடனும் நடைபெற்றது.

## திருமணம்.

29—9—44 வெள்ளிக்கிழமைக் காலை கூடலூர் O. T. மாலுமியர்பேட்டை நாட்டாண்மைபொ. தியாகராஜன் அவர் கள் இல்லத்தில் குமாரபுரம் தோழர். கிருஷ்ணசாமி படையாச்சி மகன் அரங்க நாதனுக்கும், மாலுமியார்பேட்டைகுமார சாமி படையாச்சி மகள் அல்லி அம்மைக் கும் பண்ருட்டி உயர்நிலைப்பள்ளி தமி ழாசிரியர் வித்வான் தோழர். வை. பக் கிரிசாமி நயினர் அவர்களால் தமிழ் முறையில் திருமணம்செய்துவைக்கப் பட்டது.

## "சீர்திருத்தத் திருமணம்."

சிதம்பரம் தாலுக்கா கொக்கரசன் பேட்டை ஊரான்வோர் தோழர். மு. வெங்கடாசலா படையாட்சிக்கும், கூட லூர் தாலுக்காவரிஞ்சிப்பாக்கம் தோழர். பொன்னுசாமிப் படையாச்சி மகள் தோழியர். தனஇலக்குமி அம்மையாருக் கும் திருமுட்டத்தில் 12—9—44-ல் திருச்சி ஜில்லா. "சன்னுசிநல்லூர்" இளந் தமிழர்இயக்கச் செயலாளர் தோழர், குழந்தைவேலன் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.


நகைச்சுவை அரசு.

**3-வது** | என். எஸ். கிருஷ்ணன் அவர்களின், | **வாரம்**

**மங்கள பாலகான சபையாரால்**

**மகத்தான வெற்றியுடன்**

# இழந்த காதல்

(நாடகம்)

**சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்**

புதியசீன்கள்! நூதன ஸெட்டு அமைப்புகள்! புதிய டிரஸ்களுடன் நடைபெறுகிறது.

தினசரி செவ்வாய், வியாழன், சனி, இரவு 9-30-க்கும்,

புதன், வெள்ளி, ஞாயிறு மாலை 6-30-க்கும்.

டிக்கட் விபரம்:— ரூ. 3 0 0, 1 12 0, 1 2 0, 0 9 0, 0 4 6.

மானேஜர், P. K. பிள்ளை.

# கடவுள் விளக்கம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி,

றது, இப்பகுத்தறிவு, அறிவுக்கறிவாய் நின்று அவனை நல்வழியிற் செலுத்துகின்றது. எனவே, ஒருகாலத்தில் ஒருவனுடைய உள்ளத்திற்கு அகப்படாமல், அவனைக்கடந்துநிற்கும் உணர்வானது, அவனுடைய முயற்சியைத் துலாக்கோலாகக்கொண்டு அவனிடம்வந்து அமைகின்றது. எந்த ஒருசெயலும், ஒருவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் அளவுக்குமேல் பயன் அளிப்பதில்லைஎன்பது கண்கூடாகையால், அறிவும் அவனவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் அளவுக்கே அவனவனிடம்வந்து அமைந்துவிடுகின்றது. இதனால், உலகில், அறிவில் உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் உளராகின்றனர். இங்ஙனம் மக்களிடம் காணப்பெறும் அறிவின் உயர்வு தாழ்விற்கு அவரவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியும் உடலமைப்புமே காரணமன்றி, மதநூலார்கூறும் வினை-விதி என்ற எதுவும் காரணமாகஇருக்க இடமில்லை. முயற்சி எடுத்துக்கொள்ளும் ஒவ்வொருவனும், அவனவன் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கேற்ப, மன்பதையின் மாணிக்கங்களாக விளங்குவதைக் காண்கின்றோம். ஆகையால், மடைமையைக் கற்பிக்கும் மதநூற்சான்றுகள் அனைத்தும் மதியுடைய மக்களால்ஒழித்து ஒதுக்கப்படுமாக. எனவே, மதநூலார் "கடவுள்" என்ற சொல்லுக்கு விளக்கும்பொருள், கற்பனையுரைஎன்பதுமட்டுமன்றிக், கரவுரை என்றும் ஒழிக!

இனி, ஒருவன் பிறக்கும்போது அறியாமையோடு பிறக்கின்றான் என்பதற்கும், பின்னரே அவனுக்கு அறிவு உண்டாகின்றதென்பதற்கும், அவ்வறிவு அவனுக்கு அகப்படாது அவனுடைய உள்ளத்தைக்கடந்து நிற்கின்றதென்பதற்கும், அக்கடந்துநிற்கும் அறிவை எப்படி-எதனால் அடையமுடியுமென்பதற்கும் திருவள்ளுவரே ஆதாரம் தருகின்றார். எப்படியென்றால்,

"பிறப்பினும் பேதைமை
நீங்கிச் சிறப்பினும்
"செம்பொருள் காண்பதறிவு"

என்பதாகும். இதன் பொருள்: பிறப்பினால்உண்டாகும் அறியாமையினின்றும் நீங்கிச் சிறப்பைத்தருகின்ற செவ்விய பொருளை அதாவது, பகுத்தறிவைக் கண்டு அதன்படி ஒழுகுவதேஅறிவுஎனப்படும் என்பது இக்குறளிற்போந்த உண்மையாகும். இக்குறள் கற்பிக்குமஇவ்வுண்மைப்பொருளைஉணரும் ஆற்றலில்லாதார், தத்தம் கொள்கைகட்கேற்பப் பொருள்கொண்டு தாம்மயங்குவதுமட்டுமின்றித், தம்மையொத்த மக்களையும் மயக்கி மன்பதைக்குக் கேடுதேடுகின்றனர். "மெய்யுணர்வு" என்ற அதிகாரத்தில்திருவள்ளுவர்கூறிய அறிவுத்துறைக்கு அணிகலமாகவுள்ள இக்குறள் வெண்பாவை, மடைமையைக் கற்பிக்கும் மதத்துறையிற்சேர்த்துப் பொருள் கொள்வதுபுல்லறிவாளர்செயலேயாகும். சைவர்கள் இக்குறள்வெண்பாவைக்கையாண்டு, தங்கள் மதக்கொள்கையை அதனுள் நுழைத்து, மக்களின் மெய்யுணர்வுக்கு மண்போடுகின்றனர். அதாவது, இக்குறளிற்காணப்படும் "செம்பொருள்" என்ற சொல்லைத் தாங்கள் வழிபடுஞ் சிவனுக்கு ஏற்றி அவனேசெம்மையானபொருள்என்றுகூறிமக்களை மதவலையிற்சிக்கவைக்கின்றனர். ஐயகோ! இதுபோன்ற தமிழ்க்கொலை வேறுயாதுளது? மக்களுக்கு இருக்கக்கூடிய மெய்யுணர்வைக் குறிக்கும் இச்செம்பொருள் என்ற சொல்லுக்கும், சிகப்புநிறம் அல்லது நெருப்பு வடிவமுடையவனாகப்பேசப்படும் மக்களினத்தைச்சேராத (சங்கப்புலவனாகஇருந்தசிவனல்ல) இச்சிவனுக்கும் யாது தொடர்பிருக்கமுடியும்? செம்பொருள் என்பது செவ்வியபொருள்; சிறந்தபொருள். சிறந்தபொருள் உலகில் அறிவைத்தவிர வேறொன்றுமில்லையாகையால், மெய்யுணர்வு ஒன்றுக்கே செம்பொருள் என்ற சீரிய சொல் சிறப்புடைப்பொருளைத் தருவதாகும், அன்றியுஞ், சைவநூலார் கொள்கைப்படி செம்பொருள் என்ற சொல், சைவர்களால் கடவுள் நிலையில் வைத்து வணங்கப்படும்சிவனையே குறிக்குமென்றால், அச்சொல்லை இக்குறளில் வழங்கிய திருவள்ளுவர், சைவத்தைப் பற்றியோ, சிவனைப்பற்றியோ அல்லது வேறு மதங்கள்-கடவுளரைப்பற்றியோ ஏன் எதுவும்பேசவில்லை என்றகேள்வி இயல்பாகவே எழுகின்றதன்றோ!

திருக்குறளில் (இப்போது) காணப்படும் "கடவுள் வாழ்த்து" என்ற அதிகாரத்தில் காணப்படாத செம்பொருள் என்றசொல், மக்களுக்கு வேண்டப்படுவதாகிய பகுத்தறிவைக்குறிக்கும் "மெய்யுணர்வு" என்ற அதிகாரத்திலன்றோ காணப்படுகின்றது! சைவநூலார்கூறும் கடவுளுக்குச் செம்பொருள் என்பது இயைபுடைப்பெயர் என்றால், திருவள்ளுவருக்கும் அக்கருத்துத்தான் என்றால், அச்சொல், கடவுள்வாழ்த்தில்அமையாது, மெய்யுணர்வு என்ற அதிகாரத்தில் அமைந்த காரணந்தான் யாதோ? அன்றியும், கடவுள் வாழ்த்தைப்பாடி, அதன்படிமக்கள் ஒழுகவேண்டுமென்று கற்பித்த ஒருவர் மெய்யுணர்வைப்பற்றிப் பாடிஇருக்கவேண்டிய இன்றியமையாமையே இல்லையன்றோ! மெய்யுணர்வின்படிநடக்கின்ற ஒருவனுக்கு எக்காரணங்கொண்டும் கடவுளின்துணை தேவைப்பட இடமேயில்லை. அவன் தன்னுடைய அறிவைத்துணைகொண்டே தன்னுடைய காரியங்களைச் செய்கின்றான்-செய்வான். அதுவேயுமன்றித்; திருக்குறளிற்காணப்படும் கடவுள் வாழ்த்தும், மதக்கருத்துக்களை விளக்கும் இயற்கைக்குமாறானபிற அதிகாரங்களும், திருவள்ளுவரால் செய்யப்படாத இடைச்செருகல்கள் என்பதும் அறிஞர்கண்டமுடிபாகும். அவ்வுண்மைகளை ஈண்டு விளக்கப்புகின் அவைமிக விரியும்.

இனி, இலக்கியநூலாகிய திருக்குறளிற்காணப்படும் கடவுள்வாழ்த்துப் போன்ற ஒரு காப்பதிகாரம், அதன்இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இல்லைஎன்பதும் ஈண்டுக்கருத்தூன்றிப் பார்க்கவேண்டியதொன்றும். தொல்காப்பியர் காலத்தில், மதநூலார்கூறும் கடவுள் தமிழ் நாட்டில் இருந்திருந்தால், அவர், தமிழ்மொழியின் அமைப்பையும், தமிழ் மக்களின் நற்பெரும்பண்புகளையும் விரிவாக விளக்கிய தமது தொல்காப்பியமென்னும் ஒப்புயர்வற்ற நூலுக்கு, அதன் காப்புச்செய்யுளாக ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலாவது பாடியிருப்பாரன்றோ! இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறி, மக்களை ஏமாற்றிப்பிழைக்கும் வழக்கம் பண்டைத் தமிழ்மக்கள்பால் இருந்ததில்லை என்பதைத் தொல்காப்பியம் நன்குதெளிவாக்கியிருக்கின்றது. எனவே, தொல்காப்பியர் காலத்தில். தமிழ் நாட்டில் எந்தவிதமான கடவுட்கொள்கையும் இருந்ததில்லையென்பது எவ்வித ஐயுறவுமின்றித் துணியப்படுவதால், இப்போது நம்மவரிடையே காணப்படும்கடவுள் வழிபாடும், அதுகுறித்த கொள்கைகளும், பிற்காலத்தில் ஆரியமக்களால்கொண்டுவரப்பட்டனவாமென்பதை விளக்க நீண்ட ஆராய்ச்சியோ நூல்ஆதாரமோ வேண்டியதில்லை. அன்றியும் திருவள்ளுவர்காலத்தில்ஆரியர்களால்கொண்டுவரப்பட்டகடவுட்கொள்கை ஓரளவுதமிழ்நாட்டில் பரவியிருந்ததும், அதையே காரணமாகக்கொண்டு திருக்குறளிலும் கடவுட்கொள்கையைப்பற்றிய சில குறிப்புகள் இடைசெருகலாகசேர்க்க முடிந்ததையும் போலக், கடவுட்கொள்கையே இல்லாத பண்டைய தமிழ்மக்கள்காலத்தில் ஆக்கப்பெற்ற தனித்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் இக்கடவுட்கொள்கையைப் புகுத்த இடைக்காலப்புலவர்களால் முடியாதபடி அந்நூல் அமைந்துவிட்டதென்பதும் ஈண்டுக் கருதற்பாலது. எனவே யான் மேலே எடுத்துக்காட்டியபடி "கடவுள்" என்ற தமிழ்ச்சொல் மக்களின் உடம்பு உள்ளம் ஆகிய இரண்டன் உதவியையும் பெற்றுநின்று மக்களின் மெய்யுணர்வை விளக்கும ஒருசிறந்த சொல்லாகுமென்று கடைபிடிக்க.

இதுபோலவே தமிழ் மொழியில்வரும் ஆண்டவன் என்ற சொல்லுக்கும் பொருள்கொள்க. எப்படியெனில், கடவுள் என்ற சொல், கட—உள் என்ற இரு சொற்களைக்கொண்டு, ஒரு பொருளை

(12ம் பக்கம் பார்க்க)

# கடவுள் விளக்கம்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

விளக்குகின்றதோ, இதுபோலவே ஆண்டவன் என்றசொல்லும், ஆண்டு-அவன் என்ற இருசொற்களைக்கொண்டு ஒரு பொருளையே விளக்குகின்றது. கடவுள் என்றசொல் உள்ளத்தைக்கடந்து நிற்கும் அறிவை விளக்குகின்றதென மேலே யெடுத்துக்காட்டியதுபோலவே, ஆண்டவன் என்றசொல்லும், ஆண்டு=அங்கே, அப்பால், உள்ளத்துக்கப்பால்; அவன்=அறிவு, இருக்கிறதென்பதை அதாவது மக்களின் உள்ளத்திற்கப்பால் அறிவு இருந்து பின்னர் அவனெடுத்துக்கொள்ளும் முயற்சியினால்அவனிடம்வந்து அமைகின்றதென்பதை இவ்ஆண்டவன் என்னும்சொல்லும் விளக்குதல்காண்க.

இனி, மக்களிடம் காணப்பெறும் மெய்யுணர்வு ஒன்றைமட்டுமே குறிக்கும் "கடவுள்" என்ற இச்சொல்லை, மதநூலார் தாங்கள் கூறும் கடவுளுக்கும், கற்பித்தது என்னையெனிற், கூறுதும். மதநூலார் 'மக்களின் அறிவுக்கெட்டாத ஒரு பொருள், கடவுள் என்ற பெயரோடுஎங்கோஇருந்துகொண்டுமன்பதையைஇயக்குகின்றது என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு, தங்கள் மதங்களையுண்டாக்கவேண்டியிருந்தால், தங்களின் கற்பனைப் பொருளுக்கு ஏற்ற ஒருசொல், கருத்தில்மாறுபடாத முறையில், தமிழில் அமையவேண்டுமென்று எண்ணிப்பார்த்தபொழுது, 'உள்ளத்தைக்கடந்துநிற்பதுஅறிவு. அதற்குப்பெயர் கடவுள் அல்லது ஆண்டவன். நாம் விளம்பரம் செய்யப்போவதும் உயிர்களின் உள்ளத்தைக்கடந்து நின்று உலகத்தை இயக்கும் ஆற்றல்மிக்க ஒரு பெரும் பொருள் உண்டென்றுகூறுவதேயாகும். ஆகவின், தமிழ் மக்கள் தங்கள் மெய்யுணர்வைக்குறிக்க வழங்கும் "கடவுள்" என்றசொல்லே எமது கொள்கைக்கும் ஓரளவு பொருந்துவதாகக் காணப்படுவதால், அச்சொல்லையே நாமும் கையாளுதல் நலம்" எனக்கருதிய சூழ்ச்சியிற்கைதேர்ந்த ஆரியர்களும், அவர்வழிஒழுகிய தமிழரிற் சிலரும் அச்சொற்களையேமிகஎளிதாகக் கையாண்டு, தங்கள் கொள்கையில் வெற்றி பெற்றுவிட்டார்கள். இவ்வாறுகப் பலவிழுமிய பொருட்களைத்தன்னகத்தே கொண்டுள்ளதமிழ்ச் சொற்கள் எத்தனையோ, மதநூலாரிடம் அகப்பட்டு, உண்மை வழக்கிழந்துபோயின, வென்பது கண்கூடு. எடுத்துக்காட்டாக, இறைவன் என்ற தமிழ்ச்சொல் அரசனையே குறித்து நிற்பதாயினும், நமது நாட்டில் மதக் கொள்கை ஏற்பட்ட பின்னர், அச்சொல் பெரும்பாலும், மதநூலார் கூறும் கற்பனைக் கடவுளையே குறிப்பதாக இருப்பதை எவரே அறியாதார்! இறைவன் என்ற சொல்லைத், திருவள்ளுவர் இறைமாட்சி என்ற அரசியலைக்குறிக்கும் அதிகாரத்தில் அமைத்திருப்பதும் ஈண்டு கருதற்பாலது. இவ்வாறு இறைவன் என்ற சொல் அரசனையே குறிப்பதென்பது வெளிப்படையாக அறியக்கிடந்தபோதிலும், அச்சொல் மக்களால் ஒலிக்கப்பட்டவுடனே, அது மதநூலார் கூறும் கற்பனைக் கடவுளை எப்படிச்சார்ந்து விடுகின்றதோ, அப்படியே மெய்யுணர்வைக் குறிக்கும் கடவுள் என்ற தமிழ்ச் சொல்லும், அறிவையும் அரசனையும் குறிக்கும் ஆண்டவனென்ற தமிழ்ச் சொல்லும் தம் உண்மைப்பொருள்களையிழந்து வழங்கப்பட்டு வருகின்றதென்று உணர்க. எனவே, தமிழ் மக்களுக்குக் கல்வியும் அதனால் ஏற்படும்மெய்யுணர்வும் உண்டாகாதவரை, இத்தகைய வைரம் பாய்ந்த ஐயப்பாடுகளை நீக்கிக் கொள்வதென்பது,சட்டவாயிலாகவன்றி, மற்றெவ்வித முயற்சிகள் எடுத்துக்கொண்டபோதிலும் எளிதில் முடியக்கூடியதன்று. இவற்றையெல்லாம் எண்ணும்போதுதான் நாட்டுப்பிரிவினை இன்றியமையாதென்பது உறுதிப்படுகிறது. நமது நாட்டை நமதாக ஆக்கிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டால் இத்தகைய ஐயப்பாடுகளைமிக எளிதில்போக்கி நம்மக்களுக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்ய முடியும்.

இனி, மதநூல்கள் சிலவற்றில் கூறியுள்ளபடி, 'தேடினால் கிடைப்பர்,' என்ற முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளைநம்பி, அவ்வழி சென்றோரெல்லாம் அத்துறையைக் காணமுடியாது சலிப்படைந்து தங்களின் ஏமாந்த இயல்பை இயம்பியுள்ளனர். பட்டினத்தார், திருநாவுக்கரசர்,புத்தர் தாயுமானவர்ஆகியவர்கள் அவ்வழியிற்போய் மீண்டபலருட்சிலராவர்.ஈருவாழைமரத்தின் மட்டைகளை ஒவ்வொன்றாக உரித்துப்பார்த்தால்,உரிக்கப்பட்ட அம்மட்டைகளைத்தவிர அதனுள் வேறொன்றும் இல்லாமை புலப்படுவதுபோல, மதநூலில் கூறிய வழியே சென்றவர்கள், தாங்கள் கருதிப்போன கடவுள் காணப்படாமையைக் கருத்தோடு திருத்தமாகக் கூறியுள்ளார்கள். எனவே இல்லாத ஒன்றை உண்டெனக்கூறும் கொள்கை என்றைக்குத்தோன்றியதோ அன்றிருந்தே அக்கூற்று மறுக்கப்பட்டும் வந்தது, வருகின்றது. ஆனால் உண்மைக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு மதக்கொள்கைகளால் பிரித்துப்பிளவுபடுத்தப்பட்டிருப்பதால்,பொய்யை மெய்யெனக்கொள்ளும்பேதைமையேபெருமைப் பெற்று விடுகின்றது.இதனால் உண்மைகளைஉருவாக்குவதற்குப்பெருமுயற்சியும்,பேருழைப்பும், பெருந்துணிவும், இடுக்கண் வந்தால் ஏற்கும் இயல்பும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன. இஞ்ஞான்றை உலகம் இத்துறையில் ஓரளவு வெற்றி பெற்று வருவது கண்கூடு. காரணம்: மக்களிடையே மங்கிக்கிடந்த பகுத்தறிவு வென்னும் ப... வன் தன் ஒளி அலைகளால் விரிந்த உ... கின் சரிந்த கொள்கைகளை வீழ்... ஆராய்ச்சித்துறையின் அணிகலமாக... குவதாலென்க. என்று இதுகாறும் கூறி... யதுகொண்டு கடவுள் என்ற சொல்... பற்றிய விளக்கமும், அச்சொல் எதனை குறிக்கிறதென்ற உண்மையும், மதநூலார் அப்பொருளை எவ்வகையில் பயன்படுத்தினர் என்ற சூழ்ச்சியும் எளிதில் விளங்கிவிடுமென்ற துணிவால் இதுபற்றி இன்னும் விரித்துரையாமல் இத்துடன்முடிக்கிறேன்.

## திராவிடர் கழகம்

15–10–44 ஞாயிறு மாலை 4-மணிக்கு தோழர் மா. பீட்டர் தலைமையில் திருப்பாதிரிப்புலியூர் போடிசெட்டி தெருவில் நடந்த பொதுக்கூட்டத்தில் குடந்தை தோழர் எஸ். கே. சாமி அவர்களால் திராவிடர் கழகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. மா. பீட்டர் தலைவராகவும், இரத்தினசபாபதி செயலாளராகவும், செ. சந்தானம் பொருளாளராகவும், மற்றும் இருவர் உறுப்பினர்களாகவும், கொண்ட செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது.

தந்தி:—"புறமார்க்" திருச்சி.




Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.